வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.08.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 252 | பக்கங்கள் : 16

# கிளிநொச்சி அபாய வலயமாகிறது; 150 தொற்றாளர் நேற்று அடையாளம்

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மட்டும் 150 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

பி. சி. ஆர்., அன்ரிஜென் பரிசோதனைகளிலேயே இந்தத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் மிகவேகமாக அதிகரித்து வருகின்றனர். இதனால் அபாய மாவட்டமாக கிளிநொச்சி காணப்படுகின்றது. எனவே, மக்கள் பொறுப்புடன் நடந்தால் மட்டுமே தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமும் கிளிநொச்சியில் 126 தொற்றாளர்கள் பதிவானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## 3000 கடந்தது தொற்று

கொழும்பு, ஓக. 13

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 39 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 45 ஆயிரத்து 118 ஆக எகிறியுள்ளது. (இ)

## 156ஆக எகிறியது கொரோனா பலி!

கொழும்பு, ஓக. 13

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் கொரோனா தொற்று காரணமாக 156 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டது.

அண்மைநாட்களாக கொரோனா மரணங்கள் 100ஐ கடந்து வந்தன. இந்த நிலையில் திடீர் அதிகரிப்பாக 150ஐ கடந்து மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும், 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட 22 பெண்களும், 13 ஆண்களுமாக 35 பேர் மரணமாகினர். 60 வயதுக்கு மேற்பட்ட 65 பெண்களும், 56 ஆண்களுமாக 121 பேர் உயிரிழந்தனர். இதன்படி, 87 பெண்களும், 69 ஆண்களுமாக 156 பேர் நேற்று முன்தினம் மட்டும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உத்தியோகபூர்வ அறிவிப்பைவிட நாளாந்த தொற்றாளர்கள் அதிகம்!

## விரைவில் 5000ஐ எட்டும் என்று எச்சரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 13

நாளாந்த தொற்று எண்ணிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிடும் நாளாந்த தொற்று எண்ணிக்கையில் முரண்பாடு இருப்பதாக முன்னணி மருத்துவ ஊழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 15

## நாட்டை மீண்டும் முடக்குவதா? முடிவின்றி முடிந்தது சந்திப்பு

### மீண்டும் இன்று கூடுகின்றது



கொழும்பு, ஓக.13

நாட்டின் தற்போதைய பேராபத்தான நிலைமையில் நாட்டை மீண்டும் முடக்குவதா என்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற சந்திப்பு முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொரோனா அசாதாரண சூழ்நிலை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை தொடக் 15

## ரயில்வே திணைக்கள பொறுப்பதிகாரிகள் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஓக. 13

ரயில்வே திணைக்களத்தின் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் அந்த சங்கத்தினால் பொதுமக்களுக்கு கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட் 15



## சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி தொழிற்சங்கங்கள் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஓக. 13

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று இந்தப் போராட்டம் 15

## கல்வியங்காட்டில் வன்முறை குழு நேற்று அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஓக. 13

கல்வியங்காடு பகுதியில் பல்பொருள் விற்பனையகம் மீது வன்முறை குழு ஒன்று தாக்கியதுடன் பெற்றோல் குண்டு வீசிவிட்டு தப்பிச் சென்றது.

இந்த சம்பவம் நேற்று மாலை 6.40 மணியளவில் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறை குழு விற்பனையகத்தின் மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்கி 15

## யாழ்ப்பாணத்தில் 75 பேர் உட்பட வடக்கில் 119 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணத்தில் 75 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 119 தொற்றாளர்கள்கள் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 373 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 90 பேர் தொற்றாளர் 15



கோப்பாய் சந்தியில் இரு கனரக வாகனங்கள் நேற்று மோதி விபத்து ஏற்பட்டபோது, கனரக வாகனம் ஒன்று சமிக்ஞை விளக்கு கம்பத்தை மோதித்தள்ளியது...

## இப்படியும் நடக்கிறது...!

தமிழர் தரப்பு ஒன்றாக இருப்பதைவிட பல பிரிவுகளாக இருப்பதையே அரச தரப்பு விரும்பும் என்பதை நேற்றைய தினம் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

அதனைப் படித்துவிட்டு கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் பேசினார்.

"நீங்கள் எழுதுவது தவறு. தமிழர் தரப்பு ஒன்றாக இருப்பதைத்தான் ரணில் ஆட்சியில் இருந்தபோது விரும்பினார்", என்றார்.

அவர் ஆட்சியில் இருந்தபோது அவரது அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு செல்வதற்கு முன்னர் கடும் பேரம்பேசல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் அது. அப்போது முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தபோது ரணில் இப்படிச் சொன்னாராம்.

"உங்களோடு பேசுவதென்றால் நாங்கள் உங்கள் கட்சியிலுள்ள அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தனித்தனியாக பேசவேண்டும். இல்லையெனில் அவர்கள் மற்றப்பக்கம் போய்விடுவார்கள். ஆனால், கூட்டமைப்பைப் பாருங்கள். பதினைந்து பேரின் ஆதரவையும் பெறுவதற்கு நாங்கள் ஒருவருடன் பேசினால் போதுமானது", என்றாராம்.

இந்தக் கதையைச் சொன்ன அந்த ஊடகவியலாளர், "ராஜபக்ஷக்களுக்கும் கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்காவிட்டாலும் வாக்களிப்பை புறக்கணிக்கச் சொல்லவாவது தேவைப்படுவார்கள்", என்றார் சிரித்துக்கொண்டே.

"தமிழர் தரப்பு எந்தத் தீர்வைப் பெறுவது என்றாலும் அது அரசாங்கத்துடன் பேசித்தான் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதைத்தானே நீங்களும் எழுதிவருகிறீர்கள். அப்படியெனில் அவர்கள் இப்போது இருக்கின்ற அரசாங்கத்துடனும் பேசத்தானே வேண்டும். பின்னர் எதற்கு அத்தகைய பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டைபோடுகிறீர்கள்", என்றும் அந்த ஊடகர் கேட்டார்.

"உண்மைதான், எத்தகைய தீர்வைப் பெறுவதானாலும், அது ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்களுடன் பேசித்தான் பெறவேண்டும் என்பது மட்டுமல்ல, அதனை பிரதான எதிர்க்கட்சியும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. இதனை நாம் பலதடவை இந்தப் பத்தியிலும் வலியுறுத்தியிருக்கிறோம்.

"ஆனால், நெருக்கடியிலிருக்கும் அரசாங்கம், தனது நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, தற்காலிக ஏற்பாடாக பேசுவதையும் ஏற்கமுடியாது தானே", என்றேன்.

முதலில் பேசுவதென்றால், அரசாங்கம் அதிகபட்சம் பதின்மூன்றாவது திருத்தத்தையாவது ஏற்றுக் கொள்ள வேண்டாமா என்ற எனது கோரிக்கையையும் ஊடக நண்பர் எற்றுக்கொள்ளத் தவறவில்லை.

நேற்றைய எமது பத்தியில் நாம் வலியுறுத்தியது, இந்தப் பேச்சுக்களால் அரசு இரண்டு நன்மைகளைப் பெறப்போகின்றது என்பதே. ஒன்று, சர்வதேச அழுத்தங்களிலிருந்து பாதுகாப்பது. இரண்டாவது, அரசுடன் பேசுவது தோல்வியில் முடிய, அதனால் கூட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலும் பலவீனமடைவது.

இரண்டாவது விடயம் நிச்சயம் நடக்கும் என்பதையே நடக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. பேச்சு குறித்து முடிவெடுப்பதும், என்ன பேசுவது என்பதைத் தீர்மானிப்பதும் பழைய கதையாகத் தொடர்ந்தால் அது நடப்பதையும் யாராலும் தடுக்க முடியாது.

- ஊர்க்குருவி

# மணல்காடு சவுக்கம் காட்டுக்கு எல்லை: மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

வடமராட்சி, ஓக. 13

மணல்காடு சவுக்கமர காட்டுக்கு எல்லையிட வந்த வன வளத் திணைக்கள அதிகாரிகளும் அவர்களுக்கு பாதுகாப்பாக வந்த அதிரடிப் படையினரும் மக்களின் எதிர்ப்பால் தமது முயற்சியை கைவிட்டு சென்றனர்.

வடமராட்சி கிழக்கு மணல் காடு பகுதியில் பொதுமக்கள், பொது அமைப்புகளால் உருவாக்கப்பட்டு பராமரித்து வரும் சவுக்கம் காட்டை வனவளத் திணைக்களம் உரிமை கோரியது.

இந்த நிலையில், அந்தப் பகுதியை எல்லைக் கல் அமைத்து தமது ஆளுகைக்கு உட்படுத்துவதற்காக நேற்று இரு அதிகாரிகளும் அவர்களுக்கு பாதுகாப்பாக விசேட அதிரடிப் படையினரும் அப்பகுதிக்கு வருகை தந்தனர். இதன்போது, அந்தக் காடு தம்மால் வளர்க்கப்பட்டது என்றும், வனவளத் திணைக்களத்துக்கு தர முடியாது எனவும் மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். இதையடுத்து அதிகாரிகள் அப்பகுதியிலிருந்து வெளியேறினர்.

இந்த சவுக்கம் காடு 1980 மற்றும் 1993 காலப்பகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணம், மற்றும் மக்கள் அமைப்புகாளால் நாட்டி வளர்க்கப்பட்டது. இந்த சவுக்கம் காட்டுப் பகுதியில் பொழுது போக்கு மையம் 2016 ஆண்டு அமைக்கப்பட்டது.

அத்துடன், ஏழு ஏக்கர் வேலி அமைக்கப்பட்டுள்ளது. சவுக்கம் காட்டுப் பூங்கா தற்போது மணல் காடு கிராம அபிவிருத்தி சங்கத்தின் பராமரிப்பில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 2)

## முல்லையிலிருந்து மடுவுக்கு யாத்திரை!

முல்லைத்தீவு, ஓக. 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து மடு மாதா திருத்தலத்திற்கு, பக்தர்கள் பலரும் பாத யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பயணிக்கும் பக்தர்கள் கோவிட் 19 சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடித்தே பாதயாத்திரையில் ஈடுபடுவதாகத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின், இரணைப்பாலை, வண்ணாங்குளம், தீர்த்தக்கரை, முள்ளியவளை, கூழாமுறிப்பு, மாமூலை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் இவ்வாறு பாதயாத்திரை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கரைச்சி சபையில் நால்வருக்கு தொற்று

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சியின் கரைச்சி பிரதேச சபையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு கடந்த செவ்வாய்க் கிழமை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் தவிசாளர் உட்பட மேலும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை புதிதாக பதவியேற்ற உறுப்பினர் ஒருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 13.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2 — 13.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
13.08.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ரெலோவின் சரியான அறிவுரை

சுமந்திரன் - பீரிஸ் சந்திப்பு தமிழ் சூழலை மீண்டும் அசைத்திருக்கின்றது. அரசாங்கத்துடன் பேசுவதில் தவறில்லை. ஆனால், அரசாங்கம் முதலில் அதன் நல்லெண்ணத்தை நிரூபிக்க வேண்டும். இதன் ஆரம்பமாக, அரசியல் யாப்பில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் விடயங்களை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக, அரசாங்கம் அதன் நம்பகத்தன்மையை நிரூபிக்க முடியும் என்று, ஈழநாடு ஏற்கனவே வலியுறுத்தியிருந்தது. இந்தக் கருத்தையே தற்போது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ ) வலியுறுத்தியிருக்கின்றது.

சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கு முயற்சிக்கும் அரசின் உபாயங்களுக்கு, தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்னும் தலைப்பில், ரெலோ ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. குறித்த அறிக்கையிலேயே ரெலோ இதனை சுட்டிக்காட்டியிருக்கின்றது. இந்த அரசாங்கம் பல நெருக்கடிகளை சந்தித்துவருவது உண்மைதான். ஆனாலும் அந்த நெருக்கடிகளை, நெருக்கடியாகக் காண்பித்துக் கொள்ளக்கூடாது என்பதிலும் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. குறிப்பாக மனித உரிமைகள் சார்ந்த சர்வதேச அழுத்தங்களுக்கு தாம் ஒருபோதும் செவிசாய்க்கப் போவதில்லை என்னும் செய்தியை சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ந்தும் கூறிவருகின்றது. கடந்த ஆட்சிக் காலத்தில், மனித உரிமைகள் மீறல் விவகாரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்துவருகின்றது. இதன் மூலம் வெளியாரின் தலையீடுகளுக்கு தாம் இடமளிக்கப் போவதில்லை என்னும் செய்தியையே அரசாங்கம் அழுத்திக்கூற முயற்சிக்கின்றது.

இந்த ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதுமே பின்கதவு உடன்பாடுகளுக்கு தயாராக இருப்பவர்கள். சமாதான பேச்சின் போது மத்தியஸ்தராக செயல்பட்ட எரிக் சொல்ஹெய்ம் இதனை ஒரு தடவை குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, அப்போது மஹிந்த ராஜபக்ஷ பின்கதவு உடன்பாடுகளுக்கு தயாராக இருந்தாரென. ஆனால், சிங்கள மக்களுக்கு தெரியக்கூடிய வகையில் சில விடயங்களை செய்வதற்கு அவர் தயாராக இருக்கவில்லை.


கூட்டமைப்பு இந்த விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ரெலோ குறிப்பிடுவது போன்று, 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்து, மாகாண சபை முறைமையை வினைத்திறனுடன் முன்னெடுப்பதை உறுதிப்படுத்துமாறு கூட்டமைப்பு ஒரு நிபந்தனையை முன்வைக்கலாம். அதில் அரசாங்கம் காண்பிக்கும் நேர்மையின் அடிப்படையில் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்கலாம்.

எந்தவொரு விடயத்திலும் அடுத்தவர்களை குற்றம்சாட்டுவதில் பயனில்லை. மற்றவர்களின் நிகழ்ச்சிநிரலை விளங்கிக்கொண்டு, தமிழர் தலைமைகள்தான் காய்களை நகர்த்த வேண்டும். எந்தவோர் அரசாங்கமும் அதன் நலன்களை முன்னிலைப்படுத்தித்தான் அரசியல் முன்னெடுப்புக்களை தீர்மானிப்பார்கள். குறிப்பாக இந்த ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள்.

எனவே, தங்களின் அரசியல் அதிகாரத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் அவர்கள் முன்னெடுக்கப் போவதில்லை. இதனையும் தாண்டி சில உடன்பாடுகளுக்கு அவர்கள் வந்தால், அது நிச்சயம் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவதற்கான ஓர் உபாயமாகவே இருக்கும். எனவே, இதனைத் தெளிவாக புரிந்து கொண்டே கூட்டமைப்பின் தலைவர்கள் செயல்பட வேண்டும். இந்த பின்புலத்தில் ரெலோவின் பரிந்துரை மிகவும் சரியானது. ரெலோவின் அறிவுரையை உள்வாங்கி, கூட்டமைப்பின் தலைவர்கள் ஒன்றுகூடி ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்.

# நல்லூரான் திருவடி!

**- அனந்த பாலகிட்ணர் -**



*நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணேனெடி*

*பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி*

*- சிவயோக சுவாமிகள்*

இந்திய அமைதிப்படை யாழ்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை 1987ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது யாழ்ப்பாண மக்கள் நூற்றுக்கணக்கில் நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தின் உட்பிரகாரத்திலும், வெளிப்பிரகாரத்திலும் தஞ்சமடைத்திருந்தனர். இந்துக்கள் மாத்திரமல்ல. ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களும் நல்லூர் கந்த சுவாமி கோவிலில் தஞ்சமடைந்திருந்தனர்.

அச்சமயத்தில் மாலை வேளைகளில் நல்லூர் ஆலய கோபுர வாசல் மண்டபத்தில், நல்லூர் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தோர் பஜனைப் பாடல்களை அடிக்கடி பாடிக் கொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

அப்போதெல்லாம் ஓங்கி ஒலித்த பஜனைப் பாடலே சிவயோக சுவாமிகள் பாடிய மேற்குறிப்பிட்ட பாடலாகும். இப்பாடல் ஒரு தீர்க்கதரிசனமான பாடலாகும். ஏனெனில் அப்பாடல் வரிகளில் காணப்படுகின்ற ஒவ்வோர் அம்சமும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிகழப்போகின்ற மனித அவலங்களை முன்கூட்டியே சிவயோக சுவாமிகளால் குறிப்பிடப்பட்டவையாகவே இருந்தன.

யுத்த காலத்தில் அத்தியாவசிய பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருந்தன. ஏறத்தாழ முழு யாழ்ப்பாணக் குடாநாடுமே தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருபுறமும் ஆயுதப்படையினர் மறுபுறமுமாக அப்பாவி வடக்கு - கிழக்கு மக்களை ஓர் இரும்பு பிடிக்குள் வைத்திருந்தனர்.

நல்லூர் ஆலய சுற்றாடலைப் பொறுத்தவரை சித்தர்கள் நடமாடிய புனித பூமி என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர்கள் பெரிதும் முருகன் ஆலய சுற்றாடல்களிலேயே இலங்கையில் மட்டுமல்ல. இந்தியாவிலும் நடமாடித் திரிந்தமையை அறிய முடியும். எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கூறுபவையெல்லாம் சரியான தீர்க்க தரிசனமாக அமைந்திருந்தன.

எனவே, சிவயோக சுவாமிகள் குறிப்பிட்ட "பாரெல்லாம் வெந்தாலும்" என்ற பாடல் வரி இன்று உலகம் முழுவதையும் வாட்டிவதைக்கின்ற கோவிட்-19 வியாதியும் இதன்காரணமாக உலகின் பல்வேறு பகுதிகளில் கொத்து கொத்தாக மக்கள் இறப்பதையும் அவர்களின் சடலங்கள் பெரிதும் எரியூட்டப்படுவதையே காணக்கூடியதாக இருக்கின்றது. இதனையே யோகர் சுவாமிகள் 'பாரெல்லாம் வெந்தாலும்' என்ற தமது பாடல்வரிகளில் குறிப்பிட்டிருந்தாரோவென்று எண்ணத் தோன்றுகிறது.


இத்தடவை நல்லூர் ஆலய மகோற்சவம் ஆலய உட்பிரகாரத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பக்தர்களின் வருகைக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக ஆண்டுதோறும் பெரிதும் களைகட்டியிருக்கும் நல்லூர் மகோற்சவம் இத்தடவை மிகவும் சுருக்கமான முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, கடந்த ஆண்டு நல்லூர் மகோற்சவத்தில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். தேர் உற்சவம் வெகுசிறப்பான முறையிலே இடம்பெற்றிருந்தது. ஆனால், தேர் உற்சவத்தில் கலந்து கொண்ட ஏராளமான பக்தர்கள் தேரை இழுத்துச்சென்று பக்திப் பரவசத்தோடு சுவாமி தரிசனம் செய்தனர். ஆனால், நல்லூர் மகாஉற்சவத்திலோ அல்லது அதன் பிராதன உற்சவமான தேர் உற்சவத்திலோ கலந்து கொண்டவர்களுக்கு எவ்வித கோவிட்-19 வியாதியின் அறிகுறிகள் தென்பட்டிருக்கவில்லை.

அத்துடன், மகோற்சவத்தில் பங்குபற்றிய பக்தர்கள் சுகதேகியாகவே அண்மைக் காலங்கள் வரை இருந்தனர். ஆயினும் இன்றைய அரசின் சில தவறான அணுகுமுறைகள் காரணமாக தற்போது வட மாகாணத்திற்குள்ளும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் கோவிட்-19 அச்சுறுத்தல் வலுவடைந்துள்ளது. இத்தகைய பின்னணியிலேயே இன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் ஆரம்பமாகின்றது.

மூன்று தசாப்தகால யுத்தத்தின்போது வட பகுதி மக்களுக்கு அபயமளித்து காப்பாற்றிய காவல் தெய்வமாக சிவயோகசுவாமிகளால் பாடப்பெற்ற நல்லூர் கந்தனின் மகிமை விளங்குகின்றது. வெறுமனே ஒரு கீர்த்திமிக்க திருத்தலமாக மாத்திரமல்லாது யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் ஒரு வரலாற்று பொக்கிஷமாகவும் நல்லூர் கந்தசுவாமி திருத்தலம் சிறப்புற்றிருக்கின்றது. ●

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒகஸ்ட் - 13 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - ஆடி 28
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
புதிய முயற்சிகளை இன்று தவிர்க்க வேண்டாம். அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த விஷயங்கள் அனுகூலமாக முடியும். மதியத்திற்கு மேல் தந்தையால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்**
உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறி நிம்மதி அளிக்கும். மற்றவர்களின் கோபத்தால் உங்களுக்கு பாதிப்பு இருக்காது. தாய்மாமன் ஆதரவும், எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும்.

**மிதுனம்**
எதிர்பாராத செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும் நாள். திடீர் பயணம் நேரலாம். மறக்க முடியாத சந்தோஷ சம்பவமொன்று நடைபெறும்.

**கடகம்**
அதிக செலவாகும் என்று நினைத்த விஷயம் குறைந்த செலவில் முடியும். மதிப்பும், மரியாதையும் உயரும். சொத்து தகராறுகள் அகலும். திட்டங்கள் வெற்றி பெறும். முன்னேற்றம் உண்டு.

**சிம்மம்**
சகபணியாளர்கள் உங்கள் சொல்லிற்கு மதிப்புக் கொடுப்பார்கள். நிலையான வருமானத்திற்கு வழிபிறக்கும். மன நிறைவு உண்டு. பெற்றோரின் ஒத்துழைப்போடு பணி ஒன்றை முடிப்பீர்கள்.

**கன்னி**
நண்பர்கள் நல்ல செய்தியை கொண்டு வந்து சேர்ப்பர். பண வரவு திருப்தி தரும். திட்டமிட்ட விஷயத்தில் திடீர் மாற்றம் நிகழும். பெண்கள் குடும்ப நலனில் மிகுந்த அக்கறை கொள்வார்கள்.

**துலாம்**
உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்களை மாற்றி அமைப்பதால் நன்மை நிகழும். கலகலப்பான நாள். வெற்றிக்கு நல்லவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**
வீடு, நிலம் சம்பந்தமான முயற்சியில் அனுகூலம் உண்டு. வியாபார முன்னேற்றம் உண்டு. மனதில் இருந்த பயம் நீங்கும். வம்பு, வழக்குகள் தீரும். வளம் காணும் நாள். செலவு முதலீடுகளாகும்.

**தனுசு**
நேற்றைய சேமிப்பு இன்றைய செலவிற்கு கைகொடுக்கும். உடன்பிறப்புகள் வழியில் மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறலாம். நினைத்த விஷயம் ஒன்று நிறைவேறி நிம்மதி ஏற்படும்.

**மகரம்**
உடல் நலத்தில் கவனம் தேவைப்படும் நாள். உங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களின் சந்திப்பு கிட்டும். நேற்றைய நிகழ்வுகளால் ஏற்பட்ட வருத்தம் மறையும்.

**கும்பம்**
சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். எதிர்கால முன்னேற்றம் கருதி முயற்சி எடுப்பீர்கள். வரவை விட செலவு கூடும்நாள். பழி ஏற்படாதபடி கவனமாக இருங்கள்.

**மீனம்**
வாக்குவாதத்தை தவிர்க்கலாம். நிதி பற்றிய கவலை வேண்டாம். வரவு திருப்தி அளிக்கும் என்றாலும் விரயங்களும் ஏற்படும். விரோதங்கள் விலகும். முயற்சி வெற்றிகரமாக முடியும்.

# பா.ஜ.க. அரசுக்கு எதிராக எதிர்கட்சிகளை ஓரணியில் திரட்ட சோனியா காந்தி திட்டம்

## ஸ்டாலினுடனும் ஆலோசனை நடத்தினார்





சென்னை, ஒக. 13

ஆளும் பா.ஜ.கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக செயல்பட்டு போராடிய நிலையில் இந்த ஒற்றுமையையும் போராட்டத்தையும் அப்படியே பாராளுமன்றத்துக்கு வெளியே மக்கள் மன்றத்திலும் நீடிக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி திட்டமிட்டுள்ளார். அதற்கான முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டிருப்பதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெகாசஸ், பெற்றோல் - டீசல் விலை உயர்வு, வேளாண் சட்டங்கள், பொது காப்பீட்டு சட்டத் திருத்தம் போன்றவற்றை முன்வைத்து எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தினம் தினம் போராடினார்கள். மக்களவை , மாநிலங்களவை இதனால் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டன.

மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் சரத் பவார், மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி, தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே உள்ளிட்ட மூத்த தலைவர்களுடன் சோனியா காந்தி இது தொடர்பில் பேசியதாகக் கூறப்படுகிறது. சந்திப்புக்கான தேதி இன்னும் இறுதி செய்யப்படவில்லை,

ராகுல் காந்தி தலைமையில் பாராளுமன்றத்தை நோக்கிய சைக்கிள் பேரணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைவை தொடர்ந்து அப்படியே எடுத்துச் சென்று இதை வரும் பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிரான ஒற்றை அணியாக கட்டமைக்க சோனியா முயற்சி செய்கிறார்.

# தி.மு.க. ஆட்சி குறித்து ஆறு மாதங்களின் பின்னரே முழுமையாக பேச முடியும்

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை பேச்சு

சென்னை, ஒக.13

ஆறு மாதத்திற்கு பிறகு தான், தி.மு.க. ஆட்சியின் செயல்பாடு குறித்து முழுமையாக பேச முடியும் என்றும், ஆனால், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமனம் பாராட்டுக்குரியதாக இருக்கிறது என பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை தி.நகரில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை 75ஆவது சுதந்திர தின பா.ஜ.க. லோகோவை வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பேசிய அவர்,



தி.மு.கவின் 100 நாள் ஆட்சி செயல்பாடுகள் தொடர்பான கேள்விக்கு, ஆறு மாதத்திற்கு பிறகு தான் ஒரு ஆட்சியின் செயல்பாடு குறித்து முழுமையாக பேச முடியும். ஆனால், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமனம் பாராட்டுக்குரியதாக இருக்கிறது.

தி.மு.க. வெளியிட்ட வெள்ளை அறிக்கை குறித்து பா.ஜ.க. ஏன் கருத்து தெரிவிக்கவில்லை? பா.ஜ.க. பயப்படுகிறதா என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அண்ணாமலை, உடனடியாக பதில் அளிக்க வேண்டும் என்ற அவசியமிலலை.

நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை பார்த்துவிட்டு கருத்து தெரிவிக்கப்படும் என்றார்.

# வழக்குகளை எதிர்கொள்ள அ.தி.மு.க. சட்ட ஆலோசனை குழு நியமனம்

சென்னை, ஒக. 13

அ.தி.மு.க மீது தொடுக்கப்படும் வழக்குகளை சட்ட ரீதியாக எதிர்கொள்ள அ.தி.மு.க. சார்பில், 6 பேர் கொண்ட ‘கழக சட்ட ஆலோசனை குழு’ அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அ.தி.மு.க. தலைமை கழகம் வெளி யிட்டுள்ளது.

இந்தக் குழுவில், டி.ஜெயக்குமார், தளவாய் சுந்தரம், சி.வி.சண்முகம், மனோஜ் பாண்டியன், இன்பதுரை, மற்றும் பாபு முருகவேல் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இது குறித்து அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், “அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள் பலர் மீது, ஆளும் கட்சியினரின் தூண்டுதலால் பழிவாங்கும் எண்ணத்தோடு போய் வழக்கு புனையப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

கழக பணிகளிலும், மக்கள் பணிகளிலும், அல்லும் பகலும் அயராது ஈடுபட்டுவரும் கழகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் பாதுகாப்பு அரணாகத் திகழும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் வேலுமணியின் வங்கி கணக்கு முடக்கம்



சென்னை, ஒக. 13

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்கு மற்றும் வங்கி லாக்கர்களை இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் முடக்கியுள்ளனர்.

சென்னை மற்றும் கோவை மாநகராட்சிகளில் ரூ.811 கோடிக்கு கேள்விகோரல் ஒதுக்கீட்டில் முறைகேடு நடைபெற்றதாக அளித்த புகாரின்பேரில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உள்பட 7 பேர் மீதும், 10 நிறுவனங்கள் மீதும் ஊழல், மோசடி உள்ளிட்ட 7 பிரிவுகளில் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

வேலுமணியில் வங்கி கணக்குகள் மற்றும் வங்கி லாக்கர்களை இலஞ்ச ஒழிப்புத்துறையினர் முடக்கியுள்ளனர். எஸ்.பி.வேலுமணியின் வீட்டில் நடத்திய சோதனையை தொடர்ந்து இலஞ்ச ஒழிப்புத்துறையினர் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# புதிய வைரஸ் திரிபு உருவாகும்!

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 13

**நாட்டில் கொரோனா தீவிரத்துக்கு மத்தியில் டெல்டா திரிபு வேகமாக பரவி வருவதால் இலங்கையில் புதிய திரிபு உருவாகுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் வைரஸ் வேகமாக பரவுவதோடு, அதிகமானோரிடையே பரவும் பட்சத்தில் அவை மரபணுவை மாற்றிக்கொள்வதால் புதுப்புது திரிபுகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளன. இதனால், இலங்கையில் டெல்டா தொற்று இன்னும் வேகமாக பரவும் பட்சத்தில் புதிய திரிபு உருவாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகில் ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் மாத்திரம் காணப்பட்டபோதிலும் தற்போது அதிக திரிபுகள் உருவாகியுள்ளமையால், இலங்கையிலும் அவ்வாறு புதிய திரிபு உருவாகுவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம் என நிபுணர்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

இது குறித்து ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்திரவிடம் வினவியபோது, நாட்டில் டெல்டா திரிபு வேகமாக பரவுவதால் புதிய திரிபுகள் உருகுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இலங்கையில் மாத்திரமல்லாது முழு உலகத்திலும் இவ்வாறு புதிய திரிபுகள் உருவாகும் நிலைமையே காணப்படுகின்றன.

ஆகவே, நாட்டில் டெல்டா தொற்று மேலும் மேலும் வேகமாக பரவும் பட்சத்தில் புதிய திரிபுகள் உருவாகுவதற்கு அதிக சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்தார்.

இதேவேளை, இது குறித்து அரசாங்க மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிக்கையில்,

இலங்கையில் டெல்டா திரிபு வேகமாக பரவுவதால் இங்கு புதிய திரிபுகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது. அவ்வாறு திரிபுகள் உருவாகுமாக இருந்தால் அது தற்போதுள்ள திரிபுகளையும் தாண்டி முக்கிய திரிபாக மாறக்கூடும்.

எனினும், சில திரிபுகள் தற்போதுள்ள திரிபுகளுடன் போட்டியிட முடியாதமையினால் உருவாகுவதற்கு முன்னரே அவை அழிந்துவிடும் சாத்தியக் கூறுகளும் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.



# கல்லுண்டாயில் பஸ் தடம்புரண்டு விபத்து

## பத்து பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 13

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த இ.போ.ச. பஸ் விபத்துக்குள்ளாகி தடம்புரண்டதில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

காரைநகர் சாலைக்குச் சொந்தமான 784 வழித்தடப் பஸ்ஸே நேற்று காலை 7.30 மணியளவில் கல்லுண்டாய் வைரர் தடம்புரண்டது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ் கல்லுண்டாய் பகுதியில் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது வேகக் கட்டுப்பாட்டை யிழந்து இழுத்துச் செல்லப் பட்டு தடம்புரண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-03)




# தமிழ் குடும்பத்தை நாடு கடத்துவதை தடுக்கும் மேன்முறையீட்டை நிராகரித்த ஆஸி. நீதிமன்றம்

கன்பரா, ஓக. 13

தற்போது நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ள இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் குடும்பத்தின் இளைய பெண் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றம் பரிசீலிக்க மறுத்து விட்டது.

04 வயதுச் சிறுமியின் சார்பாக மட்டுமே மேன்முறையீடு செய்ய சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

அவரது தந்தை, தாய் மற்றும் மூத்த சகோதரி சார்பாக முந்தைய முறையீடுகள் நிராகரிக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

அதன்படி, தற்போது அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெர்த் தடுப்பு நிலையத்திலிருந்து அவரை நீக்குமாறு புதிய முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சருக்கு மூன்று மாத விசா வழங்கி எதிர்கால சட்ட சிக்கல்களைத் தீர்த்தார்.

இலங்கையில் நடந்த போரின்போது தந்தையும் தாயும் படகில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்தனர். மேலும் அங்கு திருமணமான பிறகு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. தந்தை முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்.

சில வருடங்களுக்கு முன்பு குடும்பத்தை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும், கடைசி நேரத்தில் மனித உரிமை குழுக்களால் அது தவிர்க்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்பு கிறிஸ்மஸ் தீவில் இளைய பெண் குழந்தை கடுமையாக நோய்வாய்ப்பட்டபோது குடும்பம் நாடு கடத்தப்படுவதைத் தடுக்க மீண்டும் கடுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

# யாழ்.பல்கலைக்குள் கொரோனா தீவிரம் தொற்று நீக்கும் செயல்பாடு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாண பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடத் தொகுதியில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்ததைத் தொடர்ந்து, நிர்வாக கட்டடத்தொகுதி முழுவதும் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தரின் அறிவுறுத்தலின் படி, நிர்வாகக் கிளையினரால் நேற்று இந்தப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், துணை மருத்துவ கற்கைகள் பீடம், இந்து கற்கைகள் பீடம், இராமநாதன் மண்டப நிர்வாக தொகுதி, பராமரிப்பு கிளை, பாற்பண்ணை மாணவர் விடுதி ஆகிய இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முடக்கப்படாதமைக்கு முக்கிய காரணம் இராஜாங்க அமைச்சரின் மகனின் திருமணமா?

கொழும்பு, ஓக. 13

நாட்டில் முடக்க நிலை அறிவிக்கப்படாமைக்கும் தனது மகனின் திருமண நிகழ்விற்கும் தொடர்பு கிடையாது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தனது மகனின் திருமண நிகழ்வு நடத்தப்படுவதன் காரணமாகவே இன்னமும் நாடு முடக்கப்படவில்லை எனவும் திருமணத்தின் பின்னர் நாடு முடக்கப்படும் எனவும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் செய்திகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் முற்றிலும் ஒரு வதந்தி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் ருவிட்டர் ஊடாக பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

(அ)

# கரைச்சி பிரதேச சபையின் தவிசாளருக்கு கொரோனா!

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கடந்த செவ்வாய்க்கிழமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதன் தொடராக அவருடன் தொடர்பிலிருந்த செய்தியாளர் ஒருவருக்கு அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

நேற்று தவிசாளரும் அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 13

லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 363 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் கொழும்பு விலை ஆயிரத்து 856 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 743 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் விலை வேறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 இணையத்தளங்களை முடக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஓக. 13

கல்கிஸைப் பகுதியில் 15 வயதுச் சிறுமியை இணைய வழியாக விற்பனை செய்ய பயன்படுத்தப்பட்ட 4 இணையத்தளங்களையும் முடக்குமாறு தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவிக்கின்றார்.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அலுவலகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, இந்த இணையத்தளங்களை முடக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# அபாயநிலையை உணர்ந்து செயல்படுங்கள் மக்களே!

## கிளிநொச்சி மக்களிடம் கோரிக்கை



**கிளிநொச்சி, ஓக. 13**

**நாளுக்கு நாள் மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, பொது மக்கள் இந்த நெருக்கடியை உணர்ந்துகொண்டு செயல்பட தவறின் பேரிழப்புக்களை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும் என கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது நோயாளி 07.11.2020 அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் ஜூலை 2021 வரை 1400 கோவிட் 19 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 14 கர்ப்பவதி தாய்மார்கள், 10 வயதுக்குட்பட்ட 52 சிறுவர்கள், அடங்குகின்றனர். அத்தோடு மூன்று மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால் பெரும்பாலான பொது மக்கள் எவ்வித சமூக பொறுப்பும் இன்றி சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது நடமாடித் திரிவதனை அவதானிக்க

முடிகிறது. பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காதுவிடின் தொற்று பரவும் வேகம் மிகவும் அதிகரிக்கும்.

தடுப்பூசியை கிளிநொச்சி மக்கள் அதிக ஆர்வத்துடன் செலுத்தி வருகின்றனர்.

மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் அனைத்தும் அந்தக் காலப் பகுதிக்குள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசியை செலுத்திக் கொண்டாலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது கட்டாயமாகும். இதனை அனைத்து மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். முக்கியமாக கோவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கையானவர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். கோவிட் 19 பரிசோதனை மேற்கொள்கின்றவர்களில் இவ்வாறு அதிகரித்த தொற்றாளர்கள் இனம் காணப்படுகின்றபோது சமூகத்தில் இன்னும் எத்தனை பேர் தொற்றுடன் இருக்கின்றார்கள் என்பதும் முக்கியமானது.

மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார வளங்களை கொண்டுள்ள கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் கோவிட் 19 தொற்றாளர்கள் அதிகரித்த மருத்துவ வளங்கள் அனைத்தும் அங்கு திசைதிருப்பபடுகின்றபோது ஏனைய நோய்கள், சிகிச்சைகளை கவனிக்க முடியாது போய்விடும். இதனால் அதிகளவு பாதிப்புக்கள் மற்றும் பேரிழப்புக்கள் ஏற்படும்.

எனவே பொது மக்கள் இந்த நெருக்கடிகளை புரிந்து கொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதனை இந்த இடத்தில் வலியுறுத்துகின்றேன்-என்றார்.

# நல்லூர் கந்தன் கொடிச்சீலை நேற்று எடுத்து வரப்பட்டது





யாழ்ப்பாணம், ஓக. 13

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை மாட்டுவண்டிலில் பருத்தித்துறை வீதி வழியாக எடுத்து வரப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளி வீதி உலாசென்று சுபநேரத்தில் பூசைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

இன்று முற்பகல் பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகும் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25நாட்கள் இடம்பெறவுள்ளது.

(அ)

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் மூவருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 13

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அவர்களின் முடிவுகள் நேற்று வெளியாகின.

இதனை அடுத்து மூவரையும் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(அ-2)



# 24 ஆம் திகதி முதல் கர்ப்பவதிகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, ஓக. 13

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கர்ப்பவதித் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

# மாத்தளை நகர பகுதியில் 60 வீதமானோருக்கு தொற்று

கொழும்பு, ஓக. 13

மாத்தளை நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனைகளில் 60 சதவீத மானவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை மாநகர சபையின் உப தலைவர் அமில நிரோஷன் தெரிவித்துள்ளார்.

நகரசபையின் சுகாதார பிரிவினரால் நாளாந்தம் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

மாத்தளை நகருக்குள் கொரோனா வைரஸ் பரவல் வேகமாக பரவிவரும் நிலையில், பொதுமக்கள் அத்தியாவசிய காரணங்கள் அன்றி வெளியில் நடமாடுவதை முற்றாக தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு, பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்றுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு பூட்டு

கொழும்பு, ஓக. 13

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நாராஹேன்பிட்டி மற்றும் வெரஹேர அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

குறித்த அலுவலகங்களில் பணியாற்றிவரும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்றுறுதியானதைத் தொடர்ந்து, குறித்த அலுவலகங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 16ஆம் திகதி வரை இவ்விரு அலுவலகங்களும் மூடப்படுவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

# முன்னைய விலையிலேயே லிட்ரோ எரிவாயு விற்பனை

கொழும்பு, ஓக. 13

சமையல் எரிவாயு தொடர்பிலான அறிவித்தல்கள் வெளியாகியுள்ள நிலையில் லிட்ரோ சமையல் எரிவாயு முன்னைய விலையிலேயே விற்கப்படும் என்று அமைச்சர் லசந்த அழகியவண்ண அறிவித்துள்ளார்.

முன்னதாக லாப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதாக அறிவிப்பு வெளியாகியிருந்தது.

அதன் தொடராக லிட்ரோ சமையல் எரிவாயு விலை அதிகரிப்புத் தொடர்பில் கேட்டபோது குறித்த எரிவாயு முன்னர் விற்கப்பட்ட விலையிலேயே தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

(அ)

# ஊழியருக்கு கொரோனா தொற்று; கொடிகாமம் மக்கள் வங்கி பூட்டு

யாழ்ப்பாணம், ஓக. 13

கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையின் ஊழியர் ஒருவருக்கு எழுமாற்றான பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று கொடிகாமம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையில் குறித்த ஊழியருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன் தொடராக வங்கியின் செயல்பாடுகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து குறித்த வங்கியில் ஊழியர்களுக்கு பரிசோதனை மேற்கொண்ட பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# அரசுடன் கூட்டமைப்பு நிபந்தனையுடன் பேச்சு

## செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்

மன்னார், ஓக. 13

**தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சு இடம்பெறவேண்டுமாக இருந்தால் நிபந்தனையின் அடிப்படையில், ஒரு நல்லெண்ண முயற்சியாக அது அமையவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்துக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம்பெற உள்ளதாக அண்மைக்காலமாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சு மேற்கொள்வதற்கு பின்னிற்கப் போவதில்லை.

ஆனால், கடந்த கால அனுபவத்தை வைத்துக் கொண்டு, அரசாங்கம் எங்களுடன் பேசுவதற்கு ஒரு நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை விதிப்பது நன்றாக அமையும்.

அந்த வகையில் இன்று ஐ.நா.தீர்மானங்கள் குறிப்பாக வடக்கு - கிழக்கில் நடைபெறுகின்ற நில அபகரிப்பு, மக்களின் அன்றாட வாழ்க்கை மிக மோசமான நிலை காணப்படும் நிலையில்,காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஒவ்வொரு திணைக்களத்தினூடாகவும் எமது நிலங்கள் பறிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நினைக்கும் அரசாங்கம் முதன் முறையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கின்றபோது நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

மாகாணசபை முறைமையை இருக்கிற அதிகாரங்களுடன் செயற்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பிறப்பிக்கவேண்டும்.

அரசியல் கைதிகள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும். நில அபகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. அபகரித்த நிலங்களை விட்டுக் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

அரசாங்கம் பேச்சுக்கு அழைக்கின்றபோது நாங்கள் பேச தயாராக இருக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா.சபையிலே காலக்கெடு எடுத்து கொடுத்துள்ளதாக எம்மைப் பலர் கூறுகிறார்கள்.

பேச்சு என்று வருகின்றபோது இந்திய அரசுடன் இணைந்த ஒரு செயல்பாட்டை செய்வதன் ஊடாகத்தான் வெளிப்படைத் தன்மை உருவாகும்.

அரசாங்கம் எங்களுடன் பேசுகின்ற ஒரு முயற்சியை முன்னெடுக்குமாக இருந்தால் நாங்கள் எதிர் கொள்கின்ற பிரச்னைகளுக்கு நல்ல சமிக்ஞை கிடைப்பதன் ஊடாகத்தான் பேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும்- என்றார். (அ)



# பாவிப்பாஞ்சான் பகுதியில் தனியார் காணி விடுவிப்பு!

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி - பரவிப்பாஞ்சான் பகுதியில் 2010ஆம் ஆண்டு முதல் படையினர் வசம் இருந்த தனியார் காணியொன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

2010ஆம் ஆண்டு முதல் படையினர் வசம் இருந்த காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்ட நிலையில் குறித்த காணி தொடர்ந்தும் படையினர் வசம் இருந்தது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கரேந்ர ரணசிங்கவிடம் காணி உரிமையாளர் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் குறித்த காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயவர்த்தனவினால் குறித்த காணி கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரனிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த காணி உரிமையாளரின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் காணியை உரிமையாளரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் உள்ள காணிகளை படையினர் படிப்படியாக கையளிப்பது வரவேற்கத்தக்கது என்றும், படையினர் வசம் உள்ள மேலும் சில காணிகளையும் விடுவிக்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# களுத்துறை மாவட்டத்தை ஆக்கிரமிக்கும் கொரோனா!

கொழும்பு, ஓக. 13

நாட்டில் நேற்று காலை 6.00 மணிக்கு நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 2,987 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனரென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, நேற்று முன்தினம் அதிகளவான கொரோனா நோயாளர்கள் களுத்துறை மாவட்டத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முழுமையாக தடுப்பூசி போட்ட இலங்கையர்கள் முன் அனுமதியின்றி இனி நாடு திரும்ப முடியும்!

கொழும்பு, ஓக. 13

வெளிநாடுகளில் உள்ள, முழுமையாகத் தடுப்பூசி போட்ட இலங்கையர்கள் வெளிவிவகார அமைச்சின் முன் அனுமதி இன்றி இனி நாடு திரும்ப முடியும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிவில் விமான போக்குவரத்து ஆணையமும் இதனை உறுதி செய்துள்ளது. எனினும் நாட்டுக்குள் வந்திறங்கியதும் அவர்கள் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 14 நாட்களில் இந்தியாவுக்கான பயண வரலாற்றைக் கொண்ட அனைத்து இலங்கையர்கள் மற்றும் இலங்கையர்களுடன் வரும் வெளிநாடுகளைச் சேர்ந்த வாழ்க்கைத் துணைவர்கள், இலங்கையர்களின் குழந்தைகள், இரட்டை பிரஜாவுரிமை பெற்றவர்கள் இலங்கை வர முன்னனுமதி பெறத் தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வரும் இரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கண்டிப்பாக புறப்படுவதற்கு முன்னர் 72 மணி நேரங்களுக்குள் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அன்ரிஜென் பரிசோதனை அறிக்கை ஏற்கப்படமாட்டாது.

முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பெற்றோருடன் வரும் 2 முதல் 18 வயது வரையான சிறுவர்கள் இலங்கை வந்த 7-ஆம் நாளில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். அதன் முடிவு மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்கு தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# எட்டியாந்தோட்டையில் வெள்ளம்



கொழும்பு, ஓக. 13

எட்டியாந்தோட்டைப் பகுதியில் பெய்துவரும் கனமழை காரணமாக எட்டியாந்தோட்டை -புளத்கொஹுபிட்டி வீதி வெள்ளத்தில் மூழ்கி யது.

இதன் காரணமாக அந்த வீதி ஊடான போக்குவரத்து நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டது.

குறித்த வீதியின் பருசல்ல - களனித் தோட்டத்துக்கு இடையே உள்ள பாலம் முற்றாக வெள்ளநீரில் மூழ்கியது.

# பைசர் இரண்டாவது டோஸை பெற மன்னார் மக்கள் பெரும் ஆர்வம்

மன்னார், ஓக. 13

மன்னார் மாவட்டத்தில் பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்கள் ஆர்வத்துடன் சென்று தடுப்பூசியை பெற்று வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை மன்னார் நகரத்தில் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை , தட்சணாமருதமடு பாடசாலை, மறிச்சுக் கட்டி அல்யசிர் பாடசாலை ஆகியவற்றில் இடம்பெற்றன.

சுகாதாரத் துறையினருடன், இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் இணைந்து குறித்த நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது மக்கள் ஆர்வத்துடன் உரிய நிலையங்களுக்குச் சென்று தமது 2ஆவது டோஸ் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மகனின் திருமண கொண்டாட்டத்தை தொற்று பரவலால் நிறுத்தும் அமைச்சர்

கொழும்பு, ஓக. 13

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனது ஒரே மகனான பானுக பெர்னாண்டோ புள்ளேவின் திருமண நிகழ்வுக் கொண்டாட்டங்களை நிறுத்துவதற்கு ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கோவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தீர்மானித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறைந்த முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மற்றும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோரின் ஒரே மகனின் திருமணம் கொழும்பில் உள்ள ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற இருந்ததாக அறியமுடிகிறது.

எவ்வாறாயினும், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக திருமண விழாவின் கொண்டாட்டங்களை தவிர்த்து குறைந்த எண்ணிக்கையிலான உறவினர்களின் பங்கேற்புடன் திருமண நிகழ்வை தேவாலயம் ஒன்றில் நடத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தீர்மானித்துள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, முன்னதாக திருமண நிகழ்வுக்காக விருந்தினர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பு, இராஜாங்க அமைச்சரினால் திரும்ப பெறப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**“ தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது தொடர்பாக மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம் எழுதி கோரிக்கை விடுத்துள்ளார். மத்திய அரசிடம் இருந்து இதுவரை பதில் வரவில்லை. வரும் காலங்களில் மத்திய அரசு அனுமதி வழங்கினால் இந்தியாவில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**



# தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை கிடைக்குமா?

பிரபுராவ் ஆனந்தன்

இலங்கை அகதிகள் தங்களுக்கு இந்திய குடியுரிமை கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தால், அதை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை இயக்குநர் ஜெசிந்தா லாசரஸ் உறுதி அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களின் வாழ்க்கைத்தரம், அடிப்படை வசதிகள் குறித்து அறிய பல்வேறு அகதிகள் முகாம்களிலும் ஜெசிந்தா லாசரஸ் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாமை ஜெசிந்தா பார்வையிட்டார். பின்னர் இலங்கை அகதிகள் வசிக்கும் வீடுகளுக்குச் சென்று அங்குள்ளவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

தங்களுக்கு இந்திய குடியரிமை வழங்க வேண்டும், வசிப்பிட பகுதிகளில் போதுமான குடிநீர், மின் விளக்கு, சாலை வசதி, வீடு, கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என பெரும்பாலனவர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

இந்த ஆய்வின் போது மனு அளிக்க வந்த இலங்கை அகதி ஜெகன் பிபிசி தமிழிடம் பேசுகையில், “நான் 2009ஆம் ஆண்டு இலங்கை யில் நடந்த இறுதிகட்ட போரின் போது கடல் வழியாக இராமேஸ்வரம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி யுள்ளேன். எனக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை மனு அளித்துள்ளேன். ஆனால்,

சட்டவிரோதமாக கடல் வழியாக வந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட மாட் டாது என தெரிவித்து விட்டனர்” என் றார்.

**அகதிகள் கோரிக்கை என்ன?**

“விமானம் மூலம் உரிய ஆவணங்களுடன் இலங்கையில் இருந்து வந்து இந்தியாவில் தங்கி உள்ளவர்களுக்கும் இதுவரை இந்திய குடியுரிமை அளிக்கப்படவில்லை. எனவே, மத்திய மாநில அரசுகள் இந்தியாவில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும்,” என்று அவர் கேட்டுக் கொண்டார்.

“அகதிகள் முகாம்களுக்குள் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், சாலை, கழிப்பிட வசதி உள்ளிட்டவை மோசமாக உள்ளன. இது குறித்து ஆட்சியரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என முறையிட்டார் ஜெகன்.

“எங்களின் பிள்ளைகள் கல்லூரி படிப்பிற்காக வெளி மாவட்டங்களுக்கு செல்கின்றனர். அப்படி செல்பவர்களுக்கு தணிக்கை செய்வதில் இருந்து 3 முதல் 6 மாதங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டு கொண்டார்.

பட்டப்படிப்பு முடித்த பிள்ளைகளுக்கு இலங்கை அகதி என்பதால் பல இடங்களில் வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதாகவும் அவர்களின் எதிர் காலத்தை கவனத்தில் கொண்டு அரசு வேலைவாய்ப்பு கிடைக்க மாநில அரசு உதவ வேண்டும் என்றும் ஜெகன் வலியுறுத்தினார்.

இந்திய மருத்துவ கல்வி பயில நீட் தேர்வு நடைபெறுகிறது. அதில் இந்திய மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அவர்களை போல் இலங்கை அகதி மாணவர்களும் தேர்வு எழுத அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஜெகன் கேட்டுக் கொண்டார்.

**தமிழக அரசு என்ன செய்கிறது?**

முன்னதாக, இது குறித்து பி.பி.சி. தமிழிடம் பேசிய ஜெசிந்தா லாசரஸ், “தமிழகம் முழுவதும் பல இடங்களில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் நடத்தப்பட்ட ஆய்வில், 80 சதவீதம் பேர் இந்தியாவிலேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவித்துள்ள னர். தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க உதவும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்” என்று கூறினார்.

“தாயகத்துக்கே திரும்பிச் செல்ல விரும்புவோர், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கும் பட்சத்தில் அவர்களை கணகெடுத்து மத்திய அரசு அனுமதி பெற்று இலங்கைக்கு திருப்பி அனுப்ப மாநில அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அவர் தெரிவித்தார்.



“தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது தொடர்பாக மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம் எழுதி கோரிக்கை விடுத்துள்ளார். மத்திய அரசிடம் இருந்து இதுவரை பதில் வரவில்லை. வரும் காலங்களில் மத்திய அரசு அனுமதி வழங்கினால் இந்தியாவில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்று ஜெசிந்தா லாசரஸ் தெரிவித்தார்.

கொரோனா காலத்தில் இலங்கை அகதிகள் கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு செல்வது அதிகரித்துள்ளதால் அதை தடுக்க கடல் பாதுகாப்பை தீவிரப்படுத்த அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாகவும் அகதிகள் நல மறுவாழ்வு துறை அதிகாரிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். -பி.பி.சி.



# கல்வி துறையை புரட்டிப்போட்ட சீன அரசு எடுத்த அதிரடியான முடிவு

**எம்.சண்முகம்**

சீனாவின் கல்வித் துறையில் புரட்சிகரமான மாற்றம் ஒன்றை அந்நாட்டு அரசு சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளது. பள்ளிக் கல்வி தொடர்பான பாடத்திட்டங்களைக் கற்பிக்கும் எந்த நிறுவனமும் லாப நோக்குடன் செயல்படக் கூடாது என்பதே அந்த அறிவிப்பு. பள்ளிக் கல்விப் பாடத்திட்டங்களுக்குப் பயிற்சி தரும் எந்த நிறுவனமும் வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளைப் பெறக் கூடாது என்றும், பங்குச் சந்தை போன்றவற்றின் மூலம் நிதி திரட்டுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 6 வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கு இணையத்தின் மூலம் கற்பிக்கும் முறைக்கும் முழுமையாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பாடத்திட்டங்களை சீனாவுக்குள் கற்பிக்கக் கூடாது என்றும், வெளிநாடுகளிலிருந்து ஆசிரியர்களைப் பணியில் அமர்த்திப் பயிற்சி தரக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சீன அரசின் இந்தப் புதிய அறிவிப்பு, உலகம் முழுவதும் உள்ள கல்வியாளர்கள் மத்தியில் விவாதப்பொருளாக மாறியுள்ளது. சீனாவில் பள்ளிக் கல்விக்கான பயிற்சி வர்த்தகம் சுமார் 18 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இலாபகரமான தொழிலாக நடந்துவரும் நிலையில், இந்தப் புதிய அறிவிப்பு சீனக் கல்வித் துறையின் நடைமுறையைப் புரட்டிப் போட்டுள்ளது. இதுவரை இலாப நோக்குடன் செயல்பட்டுவந்த பயிற்சி மையங்கள், உடனடியாகத் தங்களை சேவை அமைப்பாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து கல்வித் துறையில் குவியும் நிதியைக் கட்டுப்படுத்துவது இந்தப் புதிய உத்தரவின் நோக்கங்களில் ஒன்றாகும். இதுபோன்று பள்ளிக் கல்விக்கு வெளியில் உள்ள மையங்கள் மூலம் பயிற்சி தருவதால், இளம் மாணவர்கள் பள்ளிக் கல்வி, வெளியில் தரப்படும் பயிற்சி என இரண்டு விதமான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பெற்றோர்களும் இருபுறமும் பணம் கட்டி அதிக நிதிச் சுமைக்கு ஆளாகிறார்கள் என்பதால், இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

வசதி மிக்கவர்கள் வெளியில் பயிற்சி எடுத்துக்கொள்வதால், ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு, வசதி குறைந்த மாணவர்களைப் பாதிக்கிறது. மாணவர்கள் மத்தியில் சமச்சீரற்ற நிலை ஏற்பட்டு, இது சமூகப் பிரச்சினையாக மாறுகிறது. பள்ளிக் கல்வி சேவையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை சித்தாந்தத்தைத் தனியார் பயிற்சி மையங்கள் சிதைப்பதால் அதைத் தடுக்கப் புதிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று சீன அரசு அறிவித்துள்ளது.

சீன அரசின் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ள இந்தியக் கல்வியாளர்கள் பலர் அதேபோன்ற ஓர் உத்தரவை இந்தியாவிலும் பிறப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். இது சீனாவின் இந்த புதிய கல்விக்கொள்கை அண்டை நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருப்பதை உணர்த்துகின்றது. இலங்கையிலும் இது தாக்கத்தை ஏற்படுத்துமா?

**“ வெளிநாட்டுப் பாடத்திட்டங்களை சீனாவுக்குள் கற்பிக்கக் கூடாது என்றும், வெளிநாடுகளிலிருந்து ஆசிரியர்களைப் பணியில் அமர்த்திப் பயிற்சி தரக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.**

---

# பருவநிலை மாற்ற ஆய்வறிக்கை: தமிழக பகுதிகள் கடலில் மூழ்கும் ஆபத்து?

**“ கடல் மட்டம் சராசரியாக அரை மீற்றர் அளவு வரை உயர வழிவகுக்கும், ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதியில் 2 மீற்றர் உயரம் கூட அதிகரிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இந்தியாவில் நீண்ட கடற்கரையைக் கொண்டிருக்கும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடும் இதில் கவலைப்பட நிறைய இருக்கிறது.**




சமீபத்தில் வெளியான பருவநிலை மாற்றம் தொடர்பான நாடுகளுக்கு இடையேயான குழுவின் (ஐ.பி.சி.சி. அறிக்கையில் உலகின் வெப்பநிலையைக் குறைக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் விளைவுகள் மிக மோசமாக இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்தால், தாழ்வான நிலப்பகுதிகள் பல கடலுக்குள் மூழ்கும். தமிழ்நாட்டிற்கு இது எந்த அளவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும்?

ஐ.பி.சி.சியின் (Intergovermental Panel on Climate Change) அறிக்கை ஒகஸ்ட் பத்தாம் தேதியன்று வெளியானது. புவி வெப்பமடைதல் காரணமாக உலகின் சில பகுதிகள் வாழமுடியாததாக மாற்றிவிடும் என இந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

பல நாடுகள் இந்த அறிக்கையால் பெரும் கவலையடைந்திருக்கின்றன. வெப்ப அலைகள் ஏற்படுவதோடு அதிக மழையும் வறட்சியும் மிகப் பரவலாகவும் தீவிரமாகவும் ஏற்படுமென்று இந்த அறிக்கை கூறுகிறது. ஐ.நா.வின் பொதுச் செயலாளர் இதனை “மனித குலத்துக்கான அபாயக் குறியீடு” என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பூமியின் வெப்பநிலை அதிகரிப்பதற்கு மனிதர்களே காரணம் என்பதற்கு ‘தெளிவான’ ஆதாரம் இருப்பதாக ஐ.பி.சி.சியின் அறிக்கை கூறுகிறது. அடுத்த இரண்டு தசாப்தங்களுக்குள், தொழில் புரட்சிக்கு முந்தைய நிலைகளை விட 1.5 டிகிரி அளவுக்கு வெப்பநிலை உயர வாய்ப்புள்ளது.

இது கடல் மட்டம் சராசரியாக அரை மீட்டர் அளவு வரை உயர வழிவகுக்கும், ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதியில் 2 மீற்றர் உயரம் கூட அதிகரிக்கும் வாய்ப்பும் இருக்கிறது.

இந்தியாவில் நீண்ட கடற்கரையைக் கொண்டிருக்கும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடும் இதில் கவலைப்பட நிறைய இருக்கிறது.

”வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்தாவிட்டால் வரவிருக்கும் ஆண்டுகளில் சராசரியாக கடல் மட்டம் இரண்டு மீட்டர் அளவுக்கு உயரும் என்கிறார்கள். அப்படியானால், கிட்டத்தட்ட 6 அடி அளவுக்கு கடல் மட்டும் உயரும். அப்படி உயர்ந்தால், சென்னையின் பல பகுதிகள் நீருக்குள் மூழ்கும். அதிலிருந்து கன்னியாகுமரிவரை எத்தனை கிலோ மீற்றர் பகுதிகள் நீரில் மூழ்கும் என்று பாருங்கள்” என்கிறார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த ஜி. சுந்தர்ராஜன்.

இதற்கிடையில் ஐ.பி.சி.சி. அளித்த தகவல் தொகுப்பை வைத்து, அமெரிக்காவின் நாசா, உலகில் உள்ள கடலோரப் பகுதிகள், எந்த ஆண்டில், எந்த அளவுக்கு மூழ்கும் எனக் கூறியுள்ளது.

அதன்படி பார்த்தால் தூத்துக்குடி பகுதியில் கடல் மட்டம் 2030இல் 70 மில்லி மீற்றர் அளவுக்கு உயரும். 2050ஆம் ஆண்டில் 170 மில்லி மீற்றர் உயரும். 2100ல் 59 சென்ரி மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் உயரும்.

சென்னையைப்பொறுத்தவரை, 2030இல் 70 மில்லி மீற்றர் அளவுக்கும் 2050ஆம் ஆண்டில் 170 மில்லி மீற்றர் உயரும். 2100ல் 57 சென்ரி மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் உயரும். 2150ஆம் ஆண்டில் 1.03 மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் உயரும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாசாவின் வரைபடத்தின் படி பார்த்தால், கடல் மட்டம் உயர்வது தமிழக கடற்கரையோரப் பகுதிகளைப் பொறுத்தவரை பெரிய மாற்றமின்றி ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. சுமார் 130 ஆண்டுகளில் ஒரு மீற்றர் அளவுக்கு கடல் மட் டம் உயரக்கூடும்.

“இப்படி கடல்மட்டம் உயர்வதால், கரையோரப் பகுதிகள் மூழ்கிவிடுவது மட்டுமல்லாமல் வேறு சில பயங்கர விளைவுகளும் ஏற்படும். மீதமுள்ள நிலப்பரப்பு அடிக்கடி வெள்ளப் பெருக்கைச் சந்திக்கும். நிலத்தடியில் கடல் நீர் உட்புகும்” என்கிறார் சுந்தர்ராஜன். பழவேற்காட்டிலிருந்து கன்னியாகுமரி வரை நீண்ட நிலப் பரப்பைக் கொண்ட தமிழ்நாட்டிற்கு இது நல்ல செய்தி இல்லை. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் - 1 மணித்தியாலம்

22) நோய்க்கு – சிகிச்சை எனின் அறிவுக்கு - ……………………..
(1) கல்வி (2) பாடசாலை (3) புத்தகம்

- **இரண்டு மாணவர்கள் விளையாடிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

மாணவன் ஒருவன் எழுத்துக்கள் சொல்ல மற்றொரு மாணவன் தகவலுக்கேற்ப பையொன்றில் நிற மாபிள்களை இடுதல் வேண்டும். மாணவன் எழுத்துக்கள் சொன்ன விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 23 ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A B C C B A D B C A D B B C C

A. எனச்சொல்லும் போது 1 வெள்ளை நிற மாபிளையும்
B. எனச் சொல்லும் போது 1 நீல நிற மாபிளையும்
C. எனச் சொல்லும் போது 1 கறுப்பு நிற மாபிளையும் பையில் போட வேண்டும்.
D. எனச் சொல்லும் போது பையில் போட்ட மாபிள்களில் 1 வெள்ளை நிற மாபிளையும் 1 நீல நிற மாபிளையும் வெளியே எடுக்க வேண்டும்.


23) இதகேற்ப விளையாட்டின் இறுதியில் பையில் எத்தனை மாபிள்கள் இருக்கும்?
(1) 9 மாபிள்கள் (2) 11 மாபிள்கள் (3) 10 மாபிள்கள்

24) இறுதியில் பையிலிருந்த வெள்ளை நிற மாபிள்களினதும் நீல நிற மாபிள்களினதும் எண்ணிக்கை முறையே,
(1) 1 வெள்ளை 3 நீலம் (2) 2 வெள்ளை 2 நீலம் (3) 2 வெள்ளை 2 நீலம்

25) கமலி 6 பூக்கள் செய்யும் நேரத்தில் அமலி 8 பூக்கள் செய்வாள் பரணி 5 பூக்கள் செய்யும் நேரத்தில் கமலி 3 பூக்கள் செய்வாள் எனின் வேகமாகப் பூக்களை செய்பவர் யார்?
(1) அமலி (2) பரணி (3) கமலி

26) தாராக்களின் எண்ணிக்கையானது $\frac{1}{3}$ பங்கு குயில்களின் எண்ணிக்கைக்கு சமனாகும். குயில்களானது புறாக்களின் எண்ணிக்கை $\frac{2}{5}$ பங்கிற்கு சமனாகும். புறாக்களின் எண்ணிக்கை 30 எனின் தாரக்களின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 3 (3) 5


27) கீழுள்ள உருக்களில் சமபக்கமுள்ள நான்கு முக்கோணத் துண்டுகளை வெட்டி எடுக்கக்கூடிய உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

28) அவன் உனக்கு உதவி செய்தால் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும் என்னும் தொடரின் அர்த்தம்.
(1) அவன் எப்போதும் உதவி செய்வான். என்பதை
(2) அவனுக்கு உதவி தேவைப்படுகிறது. என்பதை
(3) அவன் உதவி செய்யமாட்டான். என்பதை

29) மரக்கிளை ஒன்றில் உள்ள பூக்களில் அமருவதற்காக தேன் சிட்டுக்கள் சில பறந்து வந்தன. அச்சிட்டுக்கள் ஒவ்வொன்றாக அமர்ந்தபோது ஒரு சிட்டு அமர்வதற்கு பூ இல்லாமல் இருந்தது. இரண்டு இரண்டாக அமர்ந்த போது ஒரு பூ எஞ்சியது. எனின் அக் கிளையில் இருந்த பூக்கள், குருவிகள் முறையே
(1) 5, 4 (2) 3, 4 (3) 4, 3


30) 

அருகே காணப்படும் உருவில் அடுக்கப்பட்டுள்ள சதுரமுகிக் குற்றிகள் எத்தனை?
(1) 20
(2) 24
(3) 28

31) 

மேலுள்ள அமைப்பில் உருவாக்கக்கூடிய சதுரங்களினதும் முக்கோணங்களினதும் எண்ணிக்கை முறையே.
(1) 11, 6
(2) 8, 10
(3) 7, 4


32) உருவிலுள்ள மென்பானத்தை 300ml அளவுடைய எத்தனை குவளைகளில் நிரப்பலாம்?
(1) 8
(2) 9
(3) 10




- **கீழுள்ள தகவல்களை வாசித்து 33 ஆம் 34ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
  - காசிம், நளின், பாலன் ஆகிய மூன்று நண்பர்களிடமும் பின்வருமாறு பணம் இருந்தது.
  - பாலனிடம் இருக்கும் பணத்திலும் பார்க்க இரு மடங்கு பணம் நளினிடம் உள்ளது.
  - நளின், பாலன் ஆகிய இருவரிடமும் உள்ள பணத்தின் மொத்தத் தொகைக்கு காசிமிடமுள்ள பணம் சமமாகும்.
  - நளின், பாலனுக்கு ரூபாய் 10.00 கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணமும் சமமாகும்.

33) காசிம் இடம் இருந்த பணம் எவ்வளவு?
(1) 130 ரூபாய் (2) 60 ரூபாய் (3) 80 ரூபாய்

34) மூவரிடமும் இருந்த மொத்தப் பணத்தொகை யாது?
(1) 130 ரூபாய் (2) 120 ரூபாய் (3) 140 ரூபாய்

35) 


மேலுள்ள பற்சில்லுத் தொகுதியில் R ஆனது 2 முறை சுழலும் போது Q ஆனது 8 முறை சுழலும் போது P ஆனது 16 முறை சுழலும். எனின், P ஆனது 32 முறை சுழன்றால் R எத்தனை முறை சுழலும்?
(1) 4 முறை (2) 2 முறை (3) 8 முறை

# இராணுவத்தின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம்

## மேல் மாகாணத்தில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 13

முதியவர்கள், நோய் பாதிப்புக்களுக்கு ஆளானவர்கள், ஊனமுற்றவர்கள், பலவீனமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கலின்போது முன்னுரிமை அளிக்கும் நோக்கில், மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவை, இராணுவத்தினரால் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் எண்ணக்கருவுக்கு அமைவாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்டமாக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் அவசியம் உடையவர்கள் இலங்கை இராணுவ மருத்துவ படையினருடன் தொடர்புகொண்டு பதிவுகளை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதற்காக 10 சிறப்பு நடமாடும் வாகனங்கள் தயார் நிலையின் இருக்கின்றன எனவும், இராணுவ நோய் தடுப்பு மற்றும் மனநல மருத்துவ பணிப்பகத்தை 1906 அல்லது 011 286 0002 ஆகிய இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொண்ட பின்னர் தடுப்பூசிகள் வீட்டுக்கே வந்து வழங்கப்படும் எனவும் கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (இ)





# மட்டு. கரடியனாறு பகுதியில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்

மட்டக்களப்பு, ஓக. 13

மட்டக்களப்பு, கரடியனாறுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கரடியனாறு பங்குடாவெளிச் சந்தியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் பொலிஸாரின் சமிக்கையை மீறி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் மீது நடத்திய துப்பாக்கிச்சூட்டிலேயே குறித்த படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய துசாந்தன் என்பவரது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடிய னாறுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டவர் மரணம்!

களுத்துறை, ஓக. 13

களுத்துறை மாவட்டம், பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பயாகல வடக்கிலுள்ள வீடொன்றில் வெட்டுக் காயங்களுடன் இருந்த நபரொருவர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மரணமடைந்தார்.

பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சடலம், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கொரோனாவுக்கு முடிவுகட்ட தடுப்பூசியே பிரதான ஆயுதம்

## அனைவரும் அதைச் செலுத்த வேண்டும்
## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக.13

**“கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்புக்கு தடுப்பூசியே முக்கிய ஆயுதம். எனவே, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.”**


- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொழும்பு நகரில் இதுவரை எவ்விதத் தடுப்பூசியும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை இலங்கை பொலிஸின் சமூக பொலிஸ் குழுவினர் மற்றும் கொழும்பு நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்,

இதற்கமைவாக இன்று (நேற்று) முகத்துவாரம் மிஹிஜய செவன ரந்திய உயன பிரஜா நிலையத்தில், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே, கொழும்பு நகரில் இதுவரை எவ்விதத் தடுப்பூசிகளும் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்



குறித்த நிலையத்துக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சமூக பொலிஸ் குழுவினர் கிராம மட்டங்களில் விசேட வேலைத்திட்டமொன்றை இன்று (நேற்று) முதல் முன்னெடுத்து வருகின்றனர்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களை இனங்கண்டு அவர்களைத் தடுப்பூசி செலுத்தும் இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

தடுப்பூசி செலுத்திக்கொள்வது மிகவும் அவசியமானதாகும். எனவே, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றோம்.

அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விசேடமாக மேல் மாகாணத்தில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதாவது, தடுப்பூசி செலுத்தாதவர்களை இனங்கண்டு அவர்களைத் தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் வேலைத்திட்டம் எதிர்வரும் நாட்களில் ஏனைய மாகாணங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது” - என்றார். (இ)

# வியாபார நிலையத்தில் திருட்டு; இருவர் வசமாகச் சிக்கினர்

நுவரெலியா, ஓக. 13

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவு, கொட்டகலை நகரிலுள்ள வியாபார நிலையமொன்றில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை, சி.சி.ரி.வி. காணொலியின் உதவியினூடாகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வியாபார நிலையத்தின் உரிமையாளர் வெளியில் சென்றிருந்தபோது வியாபார நிலையத்துக்கு வந்த இளைஞர் ஒருவர், வியாபார நிலையத்திலுள்ள லாச்சியைத் திறந்து அதிலிருந்து பணத்தைத் திருடிவிட்டு ஓட்டோவொன்றில் ஹற்றன் நோக்கிப் பயணிக்கும் காட்சிகள், வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளன.

இதன்போது சுமார் 18 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டது என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் வியாபார நிலையத்தின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சி.சி.ரி.வியின் உதவியுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# இ.போ.ச. ஊழியர்கள் 285 பேருக்கு தொற்று

## களுத்துறையில் சிகிச்சை நிலையம்



கொழும்பு, ஓக. 13

இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் 285 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இவர்களில் பலர் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, களுத்துறை வாகன சாரதி பயிற்சி பாடசாலையில் இ.போ.ச பணியாளர்களுக்காகக் கொரோனாச் சிகிச்சை நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் கூறினார். (இ)



## ஆப்கானில் அதிகரிக்கும் அவலம்!

# நான்கு இலட்சம் பொதுமக்கள் பாதுகாப்பு தேடி இடப்பெயர்வு!

- ஆபத்துகள் மத்தியில் தெருவில் உறக்கம்
- குழந்தைகளும் உணவின்றி பரிதவிப்பு
- மருந்து தேடி காயத்துடன் அலையும் மக்கள்

காபூல், ஓக. 13

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் - இராணுவம் மோதலால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பு தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர். வடக்கு பகுதிகளை அதிவேகமாக தலிபான்கள் கைப்பற்றி வரும் நிலையில் தலைநகர் காபூல் நோக்கி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இடம்பெயரும் மக்கள் பலர், கைவிடப்பட்ட பதுங்கு குழிகள், தெருவோரங்களில் குழந்தைகளுடன் உறங்க வேண்டியேற்படுகின்றது. குழந்தைகள் தங்குவதற்குக்கூட பாதுகாப்பான இடங்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அத்துடன், இடம்பெயரும் மக்கள் உணவின்றி அல்லாடுகின்றனர். காயங்களுடன் நடந்து செல்பவர்கள்கூட மருந்துகளை தேடி அலையும் நிலை காணப்படுகின்றது. பிற அடிப்படை தேவைகளைக்கூட இடம்பெயரும் மக்கள் தேடவேண்டியவர்களாக உள்ளனர்.

இதேசமயம், காபூலின் புறநகரப் பகுதியில் புதர் நிலங்களில் தறப்பாள் கொட்டில்கள் அமைத்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கியுள்ளன.

குந்துஸ் மாகாணத்தை சேர்ந்த 35 வயதான வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் அசதுல்லா கூறுகையில், "மனைவி, இரண்டு மகள்களுடன் தான் வசித்து வந்த வீட்டை தலிபான்கள் தீ வைத்துவிட்டு சென்றனர். நான் ஒரு தொழிலாளி, உணவு மற்றும் மசாலா பொருட்களை விற்பனை செய்கிறேன். தலிபான்கள் தாக்கியதால் வேறு வழியின்றி காபூலுக்கு வந்தோம். இப்போது ரொட்டி அல்லது என் குழந்தைக்கு மருந்து வாங்கக்கூட கையில் பணம் இல்லை", என்று அவர் கூறினார்.

பெயர் குறிப்பிடாத பெண் ஒருவர் போரில் காயமடைந்த கணவருடன் தான் தப்பி வந்தாரெனக் கூறினார். நாம் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்தோம். ஆனால், வெடிகுண்டு வெடித்ததால் எங்கள் வீட்டை இழந்து, இங்கு வந்துள்ளோம். உடுத்த உடையுடன், பணம் இல்லாமல் எங்கள் வீட்டை விட்டு வெளியேறினோம் என்று அவர் கூறினார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலை தொடர்ந்து 2001ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டு படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தன. அங்கிருந்த தலிபான்களின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் அங்கு ஆட்சி அமைத்தது.

தற்போது அங்கிருந்து அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டு படைகள் கிட்டத்தட்ட முழுமையாக வெளியேறிவிட்டன. இந்த நிலையில், சமாதானத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. தலிபான்கள் மீண்டும் எழுச்சி பெற்று 426 மாவட்டங்களை தங்கள் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

இந்த நிலையில், தலிபான்களின் கடுமையான பழமைவாத சட்டங்களுக்கு பயந்து அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இந்நிலையில், தலிபான் - இராணுவம் மோதலால் இந்த ஆண்டில் மட்டும் 3 இலட்சத்து 90 ஆயிரம் மக்கள் தலைநகர் காபூல் அதை அண்டிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐ. நா. சபை கூறியுள்ளது. இதுவரை 156 தொண்டு நிறுவனங்கள் மூலம் 78 இலட்சம் மக்களுக்கு உணவு உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)

## 10 மாகாண தலைநகர்கள் தலிபான்கள் வசமாகின!

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 மாகாணங்களின் தலைநகர்கள் தலிபான்கள் வசமாகின. நேற்று முன்தினம் கஷானி மாகாணத்தின் மூலோபாய தலைநகரை அவர்கள் கைப்பற்றினர்.

கஷானி காபூல் - கந்தஹார் நெடுஞ்சாலையில் உள்ளது. இது தலைநகரை நோக்கிய தலிபான்களின் நகர்வில் முக்கியத்துவம் பெறுகிறது. அத்துடன், தலைநகர் காபூலை கைப்பற்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்றும் கருதப்படுகின்றது.

நாட்டின் 34 மாகாணங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு தலிபான்கள் வசமாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## தலிபான்களுக்கு எதிரான போரில் மக்கள் படையை களமிறக்கும் அரசு!

காபூல், ஓக. 13

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பல நகரங்களை தொடர்ச்சியாகக் கைப்பற்றி வருகின்றனர். இந்த நிலையில் அவர்களின் முன்னேற்றத்தை தடுக்க படையினர் அல்லாத உள்ளூர் குழுக்களுக்கும் ஆயுதங்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

பொலிஸ் படையணியின் பொறுப்பதிகாரியான மிர்சக்வால், தன்னார்வ போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கி தலிபான்களை எதிர்த்துப் போராட அரசாங்கம் ஆதரவளிக்கவுள்ளது என்று கூறினார்.

தலிபான்களிடம் நிலப்பரப்பு தொடர்ச்சியாக பறிபோவதையும், முக்கிய நகரங்களை சுற்றி பாதுகாப்பு வளையங்களை உருவாக்கவும் அதிகளவு படையணிகள் தேவைப்படுகின்றன. முன்னர், ஆயுதப் படைகளில் இருந்து வெளியேறிய அனைவரையும் மீண்டும் பணிக்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## இந்தியாவில் நிலச்சரிவு:

## காணாமல்போன 60 பேரில் 13 பேர் சடலங்களாக மீட்பு!

இந்தியாவின் இமாச்சல் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 60இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்களின் 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

இமாச்சல் பிரதேசத்தின் கின்னார் மாவட்டத்தில் ரெக்காங் பியோ - சிம்லா தேசிய நெடுஞ்சாலை பகுதியிலேயே இந்த நிலச்சரிவு இடம்பெற்றுள்ளது. இதில் பல வாகனங்கள் சிக்கி மண்ணுக்குள் புதைந்தன.

தகவலறிந்து விரைந்த மீட்பு குழுவினர் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டனர். நேற்று காலை வரை அவர்கள் 13 சடலங்களை மீட்டனர்.

நிலச்சரிவில் ஒரு பேருந்து ஒன்றும் சிக்கியுள்ளது. இதில் எத்தனை பேர் பயணித்தனர் என்பது தெரியவரவில்லை. எனினும், நிலச்சரிவில் 60இற்கும் மேற்பட்டவர்கள் சிக்கிக் காணாமல் போயுள்ளனர் என்று அஞ்சப்படுகின்றது.





## சீனாவில் அதிகரிக்கும் தொற்று: வீடுகளில் மக்கள் அடைப்பு!

பீஜிங், ஓக. 13

சீனாவில் டெல்டா திரிபு வைரஸ் அதிகளவில் மக்களை தாக்குகிறது. இதனால், மக்களை சீன அதிகாரிகள் பலவந்தமாக வீடுளுக்குள் அடைத்து வருகின்றனர்.

இது தொடர்பில், சமூக வலைத்தளங்களில் வெளியான காணொலிகளால் சர்ச்சைகள் ஏற்பட தொடங்கியுள்ளதாக தாய்வான் செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் தேசிய சுகாதார ஆணையத்தின் தரவுகளின் படி 17 மாகாணங்களில் 143 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில், 35 பேர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதுடன் 108 பேர் உள்ளூர் மக்களாகும். ஜியாங்சு மாகாணத்தில் 50 பேர், ஹெனான் மாகாணத்தில் 37 பேர் , ஹூபே மாகாணத்தில் 15 பேர் மற்றும் ஹூனான் மாகாணத்தில் ஆறு பேர் உட்பட புதிய தொற்றாளர்கள் பதிவாகினர். (ஐ)

# இலங்கைக்கு எதிரான தொடர்கள் தென்னாபிரிக்க அணி அறிவிப்பு




கேப்டவுன், ஓக. 13

குயின்ரன் டி கொக், டேவிட் மில்லர், லுங்கி நிகிடி ஆகியோர் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடமாட்டார்கள். எனினும், அவர்கள் இருபது - 20 தொடரில் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா அணி ஒருநாள், இருபது - 20 தொடர்களில் பங்கேற்பதற்காக அடுத்த மாதம் இலங்கை வருகின்றது. இரு அணிகளும் 3 ஒருநாள், 3 இருபது - 20 தொடர்களில் விளையாடவுள்ளன. முதல் போட்டி செப். 02ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின்றது.

இந்த நிலையில், குயின்ரன் டி கொக் ஓய்வுக்காக ஒருநாள் தொடரில் பங்கேற்கமாட்டார். டேவிட் மில்லர் காயம் காரணமாக விளையாடமாட்டார். நிகிடி தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார். இரு தொடர்களுக்கும் தெம்பா பவுமா அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**அணி விவரம்**

**ஒருநாள் அணி:** தெம்பா பவுமா (தலைவர்) ஜூனியர் டாலா, பெயுரன் ஹென்றிக்ஸ், ரீஷா ஹென்றிக்ஸ், ஹெய்ன்றிச் கிளாசென், ஜோர்ஜ் லிண்ட், ஜன்னெமன் மலன், கேஷவ் மஹராஜ், அய்டன் மார்க்ரம், வியான் முல்தர், அன்றிச் நோட்ஜே, அன்டில் பெஹ்லுக்வாயோ, டுவைன் பிரெரோறிஸ், ககிசோ ரபாடா, ரப்ரைஸ் சம்சி, ரஸ்ஸி வான் டேர் டுசென், கைல் வெர்ரெய்ன், லிஸாட் வில்லியம்ஸ்

**இருபது - 20 அணி:** தெம்பா பவுமா (தலைவர்), குயின்ரன் டி கொக், பிஜோரன் போர்ரியூன், பெயுரன் ஹென்றிக்ஸ், ரீஷா ஹென்றிக்ஸ், ஹெய்ன்றிச் கிளா சென், ஜோர்ஜ் லிண்ட், கேஷவ் மஹராஜ், சிசண்டா மகலா, அய்டன் மார்க்ரம், டேவிட் மில்லர், வியான் முல்தர், லுங்கி நிகிடி, அன்றிச் நோட்ஜே, அன்டில் பெஹ் லுக்வாயோ, டுவைன் பிரெரோறிஸ், ககிசோ ரபாடா, ரப்ரைஸ் சம்சி, ரஸ்ஸி வான் டேர் டுசென், லிஸாட் வில்லியம்ஸ்.

(ஐ)



# சிமோனா அதிர்ச்சி தோல்வி!

றொறன்ரோ, ஓக. 13

கனடாவின் ரோஜர்ஸ் கிண்ண தொடரில் முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறினார்.

ரோஜர்ஸ் கிண்ணத் தொடர் கனடாவின் றொறன்ரோ நகரத்தில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த போட்டிகளில் ஒன்றில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப், அமெரிக்காவின் டானியலே கொலின்ஸ் ஆகியோர் மோதினர்.

முதல் சுற்றை 6 -2 என்ற செற் கணக்கில் சிமோனா இலகுவாக வெற்றி பெற்றார். ஆனால், அடுத்த சுற்றை 6 -4 என்ற செற் கணக்கில் கொலின்ஸ் வென்றார். மூன்றா வது செற்றையும் 6-4 என்ற செற் கணக்கில் கொலின்ஸே வென்றார்.

இதனால், சிமோனா ஹாலேப் முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். முன்னதாக, காயம் காரணமாக பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் ஓப்பன் தொடர்களில் சிமோனா பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒலிம்பிக் சைக்கிளோட்ட வீராங்கனை திடீர் மரணம்!

வெலிங்டன், ஓக. 13

நியூஸிலாந்தின் முன்னாள் ஒலிம்பிக் சைக்கிள் ஓட்ட வீராங்கனை ஒலிவியா போட்மோர் காலமானாரென அந்நாட்டின் ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது. இறக்கும்போது அவருக்கு 24 வயது.

2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் மற்றும் 2018 பொதுநலவாய விளையாட்டு போட்டிகளின் போது போட்மோர் தனது சொந்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

கடந்த திங்கட்கிழமை மாலை போட்மோர் திடீர் மரணமானார். ஆனால் இறப்புக்கான காரணம் வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில் போட்மோரின் இழப்பால் மிகவும் வருத்தமடைவதாக தெரிவித்துள்ள நியூஸிலாந்து ஒலிம்பிக் குழு, இந்த இழப்பால் துயருறும் நியூஸிலாந்து சமூகத்தில் உள்ள குடும்பம், நண்பர்கள் மற்றும் பிறருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் கூறியுள்ளது. (ஐ)






# நூறு பந்துகள் கிரிக்கெட்: தாஹிர் ‘ஹட்ரிக்’ சாதனை!

பேர்மிங்ஹாம், ஓக. 13

நூறு பந்துகள் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முதலாக ‘ஹட்ரிக்’ விக்கெட்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைத்தார் இம்ரான் தாஹிர்.

தென்னாபிரிக்காவின் இம்ரான் தாஹிர் இந்தப் போட்டியில் பேர்மிங்ஹாம் பீனிக்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார்.

இந்தத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போட்டியில் பேர்மிங்ஹாம் பீனிக்ஸ், வெல்ஷ் பையர் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பீனிக்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 100 பந்துகளில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வெல்ஷ் பையர் அணி 74 பந்துகளில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை பெற்று 93 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பையர் அணியின் குவாய்ஸ் அஹமட், மெட் மில்ன்ஸ், டேவிட் பெய்ன் ஆகிய மூவரையும் இம்ரான் தாஹிர் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்கச் செய்து, ஹட்ரிக் விக்கெட் சாதனையைப் பதிவு செய்தார்.

இந்தப் போட்டியில் 19 பந்துகள் வீசிய தாஹிர், 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை வீழ்த்தி போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ஐ)

# இங்கிலாந்துடனான டெஸ்ட்: துடுப்பெடுத்தாடும் இந்தியா!



லண்டன், ஓக. 13

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி மதியபோச இடைவேளை வரை 46 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

மழை காரணமாக போட்டி தாமதமாகவே ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

ரோஹித் சர்மா, கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் நிதானமாக துடுப்பெடுத்தாடினர்.

மதியபோசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 18.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 46 ஓட்டங்களை (நேற்று மாலை 6 மணி) இந்தியா பெற்றிருந்தது.

ரோஹித் சர்மா 35 ஓட்டங்களையும், கே. எல். ராகுல் 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர். (ஐ)

# வவுனியாவில் அதிகரிக்கும் கொரோனா; ஒரேநாளில் 84 பேருக்கு தொற்று உறுதி

## தொடர்புடையவர்களை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை

வவுனியா, ஒக.13

**வவுனியாவில் மேலும் 84 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் நெளுக்குளம் பகுதியில் இருவருக்கும், சிறிநகர் பகுதியில் நான்கு பேருக்கும், அண்ணாநகர் பகுதியில் ஒருவருக்கும், அவுசலப்பிட்டிய பகுதியில் இருவருக்கும், தவசிகுளம் பகுதியில் நான்கு பேருக்கும், சின்னச்சிப்பிகுளம் பகுதியில் இருவருக்கும், நேரியகுளம் பகுதியில் இருவருக்கும், சின்னப்புதுக்குளம் பகுதியில் இருவருக்கும், கனகராயன்குளம் பகுதியில் கர்ப்பவதிப் பெண் ஒருவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் இருவருக்கும், தம்பனைபுளியங்குளம் பகுதியில் ஏழு பேருக்கும், கல்மடு பகுதியில் ஏழு பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஓமேக்கா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கும், கல்குண்ணாமடு பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், சாந்தசோலை பகுதியில் மூன்று பேருக்கும், சிறைச்சாலை கைதிகள் ஐந்து பேருக்கும், சுகாதார திணைக்கள விடுதியில் மூன்று பேருக்கும், வவுனியா இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஆறு பேருக்கும், நெல்வேலிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிவபுரம் ஒருவருக்கும், செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 13 பேருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், தாலிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வைரவபுளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை, ஒக. 13

சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்தார்.

அம்பாறை வீதி, சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த டிப்பர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சடலம், பிரேத பரிசோதனைக்கா சியம்பலாண்டு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

டிப்பர் ரக வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் சியம்பலாண்டுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# நாட்டை மூன்று வாரங்களுக்காவது முடக்கினால் மாத்திரமே மீள முடியும்

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 13

"நாட்டை ஆகக் குறைந்தது மூன்று வாரங்களுக்காவது முடக்கினால் மட்டுமே தற்போதைய நெருக்கடியான சூழலில் இருந்து மீள முடியும். எனினும், அரசு இந்த விடயத்தில் முரட்டுத்தனமாகவே செயற்படுகின்றது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரலானது மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. நாம் தொடர்ச்சியாக இவ்விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைக் கூறி வருகின்றோம். விசேடமாக எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இது குறித்து அனைவரும் கதைப்பதற்கு முன்பாகவே கருத்துக்களை கூற ஆரம்பித்துவிட்டார்.

குறிப்பாக தடுப்பூசிகளை நாட்டுக்கு விரைவில் பெற்றுக்கொடுக்குமாறு அவர் யாவருக்கும் முன்பாகவே கூறிவிட்டார்.

எனினும், அரசு இவ்விடயத்தில் முரட்டுத்தனமாகவே செயல்பட்டது. இன்றைய நிலவரத்தின்படி நாட்டை ஆகக் குறைந்தது மூன்று வாரங்களுக்காவது முடக்காது நாட்டை மீட்டெடுப்பது என்பது இயலாத காரியம்.

இதனை நாம் கூறவில்லை. சுகாதாரத் துறையில் உள்ள மிகவும் பிரசித்திப்பெற்றவர்களே அதனைக் கூறுகின்றனர்.

நாட்டில் முதலாவது அலை ஏற்பட்டபோது நாடு முற்றாக முடக்கப்பட்டது. அரைவாசி, கால்வாசியாக முடக்கப்படவில்லை. முழுமையாக முடக்கப்பட்டது. அதன்போது கொரோனா வைரஸ் பரவலை எம்மால் கட்டுப்படுத்த முடிந்தது. எனினும், தற்போது அவ்வாறான முடக்கமொன்றை நடைமுறைப்படுத்தாது நாட்டை மீட்டெடுக்க முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். ஆரம்பத்தில் முழுமையான முடக்கம் தேவையில்லை என்றே நாம் கூறினோம். எனினும், தற்போதைய நிலையில் முழுமையான முடக்கம் இல்லையெனில் கொரோனாத் தொற்றிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாத நிலைமையே ஏற்படும்.



நாம் இந்தப் பொறுப்பை அரசே ஏற்க வேண்டும் என்று கூறுகின்றோம். ஏனெனில், இன்றைய நிலவரத்தின்படி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மரணிக்கின்றனர். இந்த மரண எண்ணிக்கை தொடர்பிலும் எமக்கு சந்தேகமே உள்ளது. கொரோனா மரணங்களின் எண்ணிக்கை சரியான முறையில் வெளியிடப்படுவதில்லை என்பதே எமது குற்றச்சாட்டு. நாட்டு மக்களுக்கு இவ்விடயம் தொடர்பிலுள்ள அவதான நிலைமை, பயங்கர நிலைமையை குறைத்து மதிப்பிட்டுக் கூறியதும் அரசு செய்த பாரிய தவறாகும்" - என்றார். (இ)

# சில மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 13

இலங்கையில் மூன்று மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கண்டி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் நேற்று அதிகாலை முதல் கடும் மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

இதனால், இந்த மாவட்டங்களில் மண்சரிவு அபாய முள்ள பிரதேசங்களில் வசிப் போரை அவதானமாக இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ)

# தென்மராட்சியில் நேற்று 17 பேருக்கு கொரோனா

தென்மராட்சி, ஒக. 13

தென்மராட்சியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான அன்ரிஜென் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் செயல்படும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் கைதடிப் பணிமனையில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்கும், கைதடியில் செயல்படும் சமூக சேவைத் திணைக்களத்தின் உத்தியோத்தர்கள் மூன்று பேருக்கும், கொடிகாமத்தில் மக்கள் வங்கி ஊழியர் மற்றும் பொதுமக்கள் ஐவருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும், மிருசுவில் பகுதியில் ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் தாய், மகள் உள்ளிட்ட இருவருக்கும், வரணி பகுதியில் ஒருவருக்கும், மட்டுவில் பகுதியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் நேற்று 104 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)

# 5,000 போதை மாத்திரைகளுடன் அக்கரைப்பற்றில் இருவர் கைது

அம்பாறை, ஒக. 13

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், விசேட அதிரடிப் படையுடன் இணைந்து கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினருடன் இராணுவப் புலனாய்வு பிரிவினர் நேற்றுமுன்தினம் இரவு அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் குறித்த போதை மாத்திரை வியாபாரிகளின் வீட்டைச் சுற்றிவளைத்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டபோது அவர்களிடமிருந்து 5 ஆயிரம் போதை மாத்திரைகளை மீட்டதுடன் இருவரையும் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இரு போதை மாத்திரை வியாபாரிகளையும் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர் என்றும் அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

# போதைப்பொருள்களுடன் இருவர் கைது!

மட்டக்களப்பு, ஒக. 13

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரிகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு மற்றும் போதைத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் மற்றும் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் இணைந்து பிறைந்துறைச்சேனை பகுதியிலுள்ள குறித்த இரு வீடுகளை முற்றுகையிட்டனர்.

இதன்போது போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த 37 வயதுடைய ஒருவரை 940 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடனும், 18 வயதுடைய ஒருவரை 18 பைக்கற்றுக்கள் கொண்ட 1,570 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இருவரும் பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## யாழ்ப்பாணத்தில்...

களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தில், யாழ். போதனா மருத்துவமனையில் 20 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 12 பேரும், சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேரும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் மூவரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இருவரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இருவரும், நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் ஒருவருமாக 47பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 13 பேரும், பளை பிரதேச மருத்துவமனையில் 6 பேரும், அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருமென 20 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. வவுனியா மாவட்டத்தில், பொது மருத்துவமனையில் ஒருவர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் மூவர், செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனையில் இருவர் என 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது மருத்துவமனையில் மூவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, வசாவிளான் தனிமைப்படுத்தல் முகாமில் ஒருவருக்கும், காங்கேசன்துறை கடற்படையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வகத்தில் 170 மாதிரிகள் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் வடக்கை சேர்ந்த 14 பேர் உட்பட 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன் பிரகாரம்,

யாழ். மாவட்டத்தில் நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பளை மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

தவிர, இரணைமடு தனிமைப்படுத்தல் முகாமில் 3 பேருக்கும், முழங்காவில் கடற்படையை சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று நடத்தப்பட்ட எழுமாறான அன்ரிஜென் பரிசோதனையில் 17 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பள...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், ஆசிரியர் சேவை சங்கம், அதிபர் சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களும் பங்கேற்றுள்ளன.

நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் வரை சத்தியாக்கிரகத்தைக் கைவிட மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## நாட்டை மீண்டும்...

கம் இரவு வரை நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இராணுவத் தளபதி, முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சுகாதார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா சூழ்நிலைக்கு மத்தியில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. எனினும், இந்தக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்று மீண்டும் கூட்டம் நடைபெறவுள்ளது. (இ)

# மடு தேவாலயத்துக்கு வருபவர்கள் தடுத்து திருப்பி அனுப்பப்படுவர்!

## மன்னார் அரச அதிபர் அறிவிப்பு



மன்னார், ஒக. 13

மன்னார் மறை மாவட்டம் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழாவில் கலந்து கொள்ள பாத யாத்திரியாகவோ அல்லது வாகனங்கள் மூலமோ வேறு மாவட்டங்களில் இருந்து மடுத் திருதலத்துக்கு வருகை தருகின்றவர்களை பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தேசிய திருவிழாக்களில் ஒன்றான மன்னார் மாவட்டம் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழாவானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாவட்டத்தில் கொரோனா தொற்றை கவனத்தில் கொண்டு நாங்கள் இவ்விழா தொடர்பாக முடிவுகளை மேற்கொண்டுள்ளோம். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைகளுக்கிணங்க இம்முறை மடு திருவிழாவுக்கு 150 பக்தர்கள் மட்டுமே அனுமதிப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒருசில நாட்களில் எங்கள் அவதானிப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்து பாதயாத்திரையாக பக்தர்கள் மடுத் தேவாலயத்தை நோக்கி வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் பாதயாத்திரையாக அல்லது போக்குவரத்து மூலமோ வேறு மாவட்டங்களில் இருந்து மடுத் திருதலத்துக்கு வருவதை நிறுத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

# யாழ். பல்கலையில் மூன்றாவது மரணம்!

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தை சேர்ந்த ஒருவர் நேற்று கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் உடுவிலை சேர்ந்த 61 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விசார் தாபன கிளையில் பணியாற்றி ஓய்வுபெற்றவராவார்.

முன்னதாக யாழ். பல்கலைக்கழகத்தில் கொரோனா தொற்றால் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வியங்காட்டில்...

விட்டு, கண்ணாடிகளை அடித்து நொருக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## உத்தியோகபூர்வ...

நாளாந்தம் நடத்தப்படும் பி. சி. ஆர்., அன்ரிஜென் பரிசோதனைகளின் அடிப்படையில் ஒருநாளில் 4 ஆயிரம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். ஆனால், அதிகாரபூர்வமாக 2 ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரத்து 900 வரையானவர்களே அடையாளம் காணப்படுகின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

தற்போது கொரோனா தொற்று பரவும் வேகத்தில், இன்னும் சில நாட்களில் 5 ஆயிரத்தை எட்டிவிடும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஐ)

## ரயில்வே...

டுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை ரயில் சேவைகள் இடம்பெறாது என்றும், ரயிலுக்காக காத்திருக்க வேண்டாம் எனவும் ரயில்வே திணைக்களத்தின் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளது.

நிலையப் பொறுப்பதிகாரிகள், கனிஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான எந்த ஏற்பாட்டையும் அரசாங்கம் செய்யவில்லை என்று அந்த சங்கம் குறிப்பிடுகிறது. இந்த நிலைமையினால் ரயிலில் பயணிப்பவர்களுக்கு கடும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

# பி.சி.ஆருக்கு கட்டணம்; வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஒக. 13

தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் பி. சி. ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களுக்கான அதிகபட்ச கட்டணத்தை அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலானது, நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவிப்புக்கு அமைய தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு ஆகக்கூடிய கட்டணமாக 6,500 ரூபாயும் மற்றும் அன்ரிஜென் பரிசோதனைக்கு ஆகக்கூடிய கட்டணமாக 2,000 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# தெல்லிப்பழையில் பிறந்து 07 நாளேயான பச்சிளங் குழந்தைக்கு கொரோனா தோற்று

யாழ்ப்பாணம், ஒக. 13

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பிறந்து 07 நாளேயான பச்சிளங்குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குழந்தைக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதியில் தங்கியிருந்தபோதே குழந்தைக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா தொற்றினால் மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 2 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுப்பிட்டியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை சேர்ந்த 75 வயது முதியவர் உயிரிழந்தார். சுகாதார பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைய அவரது சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவருக்கு கோரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160ஆக உயர்வடைந்துள்ளது.

# நோயாளிகள் குறித்த உண்மையான விபரங்களை அரசு மறைக்கின்றது

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக. 13

கொரோனோ வைரஸ் நோயாளிகள் குறித்த தரவுகள் விபரங்களை அரசாங்கம் மறைக்கின்றது என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி இதனை தெரிவித்துள்ளார்.

"பெருந்தொற்று குறித்த உண்மையை அறிவதற்கான மக்களின் உரிமைகளை அரசாங்கம் மறுக்கின்றது. கோவிட் செயலணி வெளியிடும் தரவுகளிற்கும் சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர்கள் வெளியிடும் புள்ளிவிபரங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன. இது பாரதூரமான விடயம்.

சுகாதார அமைச்சின்மூலமாக கோவிட் செயலணிக்கு தகவல்கள் கிடைக்கின்றன. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமோ அல்லது கோவிட் செயலணியின் தலைவரோ உண்மைக்கு மாறான புள்ளிவிபரங்களை வெளியிடுகின்றனர்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# முக்கியமானது உணவா? ஒட்சிசனா? அரச அதிகாரிகளே தீர்மானிக்கட்டும்

## அடுத்த 2 வாரங்களில் டெல்டா மேலும் தீவிரமடையும் அபாயம்



கொழும்பு, ஓக.13

**"இலங்கையில் டெல்டா வைரஸின் தாக்கம் அடுத்த இரண்டு வாரங்களில் மேலும் தீவிரமடையும் அபாயம் காணப்படுகின்றது. எனவே, தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியமானது உணவா? அல்லது ஒட்சிசனா? என்பது தொடர்பில் அரச அதிகாரிகள் தீர்மானிக்க வேண்டும்."**

- இவ்வாறு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"குறிப்பாக அடுத்த இரண்டு-மூன்று வாரங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்மானமிக்கவை. சீனாவின் வுகான் மாநிலத்தை விடவும் இரண்டு மடங்கு வேகத்தில் இங்கு தொற்றுப் பரவுகின்றது.

இவ்வாறான நேரத்தில் நாங்கள் 5 விநாடிகளுக்கு முகக்கவசம் அணியாமல் இருந்தால் கூட நமக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. இதனால் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இதேவேளை, எதிர்காலத்தில் நம்மிடையே உணவு இன்றி இறப்பதா? ஒட்சிசன் இன்றி இறப்பதா? என்ற கேள்விகள் எழலாம். ஆனால், உணவு இல்லாவிட்டால் இருப்பவர்கள் எமக்கு வழங்குவர். ஒட்சிசன் இல்லாவிட்டால் எம்மால் வாழவே முடியாது போகும். இதனால் இது தொடர்பில் தீர்மானங்களை அரச அதிகாரிகள் எடுக்க வேண்டும்" - என்றார். (இ)

# "இன வேறுபாடின்றி தாய்நாட்டுக்காக சேவை புரிவதில் முன்னுதாரணமாக திகழ்ந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர்"



கொழும்பு, ஓக. 13

இன வேறுபாடுகளின்றி தாய்நாட்டுக்காக சேவை புரிவதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டு நேற்றுடன் 16 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. இதனையொட்டி பாராளுமன்ற உறுப் பினர் கலாநிதி சுரேன் ராகவன் கொழும்பு -03 இல் அமைந்துள்ள அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் திருவு ருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

"சர்வதேச ரீதியில் தாம் செல்வாக்குச் செலுத்திய சட்டத்துறையைக் கைவிட்டு சவாலான நேரத்தில் நம் தாய்நாட்டுக்காக முன்வந்து பணியாற்றிய லக்ஷ்மன் கதிர்காமர் அதற்காகத் தமது உயிரையும் அர்ப்பணித்தார்" என்று கலாநிதி சுரேன் ராகவன் இதன்போது மேலும் தெரி வித்தார். (இ)

# பிராணவாயுவை இறக்குமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13

நாட்டில் பிராணவாயுவுக்கான தேவைப்பாடு வெகுவாக அதிகரித்துள்ளமையால் பிராணவாயுவை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் தற்போது உச்சபட்ச அளவில் பிராணவாயு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதற்கு மாற்றீடாகவே வெளிநாடுகளில் இருந்து பிராணவாயு இறக்குமதி செய்யும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறவுள்ளது.

வைத்தியசாலைகளுக்கு அருகிலேயே பிராணவாயுவை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களும் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உச்ச அளவில் பிராணவாயு உற்பத்தி இடம்பெறுகின்ற நிலையில் நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன" - என்றார். (இ)

# நாட்டில் கொரோனா பரவல் அரசுக்கோ அதிகார மோகம்

## எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

கொழும்பு, ஓக. 13

"நாடு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு அதிகார மோகம், மாயை, ஆணவம் மற்றும் பொறுப்பற்ற தன்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டு மக்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர், எதிர்காலத்தை கடவுளிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரம்பம் முதலே அரசு இந்தக் கொரோனாத் தொற்றை தமது சொந்த அரசியல் திட்டமாக மாற்றியதாகக் குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சி தலைவர், அரசு கொரோனாவைத் தோற்கடித்ததாக பெருமையுடன் எவ்வாறு தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டது என்பதை மக்கள் நினைவில் கொண்டிருப்பர் எனவும் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கொரோனாத் தடுப்பூசியை முற்கூட்டியே பதிவு செய்யுமாறு பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் அரசைப் பல தடவைகள் கேட்டுக்கொண்டோம்.

இராஜதந்திர மட்டத்தில் பல்வேறு இராஜதந்திரிகளைச் சந்தித்து இலங்கைக்குத் தேவையான தடுப்பூசியை வழங்குவதற்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு நாம் கோரினோம்.

எனினும், அரசு அவையனைத்தையும் நிராகரித்து அதற்குப் பதிலாக தம்மிக்க பாணியை ஊக்குவித்தது.

அந்தப் பாணியை பாராளுமன்றத்துக்கும் அரசு கொண்டுவந்தது. பாராளுமன்றத்தின் சில அமைச்சர்கள் பாணிக்கான பிரசார முகவர்களாக மாறினார்கள்.

சில அமைச்சர்கள் ஆறுகளில் முட்டிகளை இட்டு பிரபல்யமாக்கியதுடன், மூட நம்பிக்கைகளை சமூக மயப்படுத்தினார்கள்.

தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்தபோது, தொற்று சமூக பரவலாகி விட்டது.

தடுப்பூசியை சரியான நேரத்தில் பெற்றுக்கொள்வது, நிதி ஒதுக்கல், மனித வளங்களை பயிற்றுவித்தல், தடுப்பூசிகளை விநியோகித்தல், திட்டமிடுதல் மற்றும் முன்னுரிமையளிப்பது தொடர்பான தெளிவான திட்டத்தை நாம் எப்போதும் முன்வைத்த போதிலும் அரசிடம் அத்தகைய திட்டம் இருக்கவில்லை.

கனடா போன்ற நாடுகள் ஒரு குடிமனுக்கு பல தடுப்பூசிகளை ஒதுக்கியுள்ள போதிலும், இன்னும் அந்த நாடுகளில் அவை மேலதிகமாகக் காணப்படுகின்றது.

எனினும், எமது நாட்டில் இதுவரை ஒரு தடுப்பூசியைக் கூட பெற்றுக்கொள்ளாதவர்கள் உள்ளனர். நாம் முற்கூட்டியே கூறிய அனைத்தும் நிறைவேறியுள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரில் 80 வீதத்துக்கும் மேற்பட்டோர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்தப் பிரிவினருக்குத் தடுப்பூசிக்கான முன்னுரிமையளிக்க வேண்டியிருந்தது. ஆரம்பம் முதலே தடுப்பூசி ஏற்றும் செயல்பாட்டில் அரசு அரசியலைப் பிணைத்துக் கொண்டது.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் அரசு முன்வைக்கும் அறிக்கைகள் முரண்பாடாக உள்ளன. கொரோனாத் தொற்றை தோற்கடித்த அனைத்து நாடுகளும் தடுப்பூசியின் மூலமே அதனை மேற்கொண்டுள்ளன. ஒவ்வொரு நாடும் இந்தப் பணியை சுகாதார நிபுணர்களிடமே ஒப்படைத்த போதிலும், இலங்கையில் அத்தகைய நிபுணர்களை ஒதுக்கிவிட்டு அரசின் விருப் பத்துக் கேற்ப தீர்மானங்கள் எடுக்கப்பட்டன - என்றுள்ளது. (இ)

# கொரோனா சடலத்தை அடக்கம் செய்ய கட்டணம் எதுவும் அறவிடவே வேண்டாம்

## அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆலோசனை

கொழும்பு, ஓக. 13

"கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக மரணிப்போரின் சடலங்களைத் தகனம் செய்யும்போது அவர்களது உறவினர்களிடம் எந்தவொரு தொகையையும் அறவிட வேண்டாம்."

- இவ்வாறு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி பிரதானிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடல் இணைய வழி ஊடாக இடம்பெற்றது.

சகல மயானங்களுக்கும் சடலங்களைத் தகனம் செய்வதற்கான எரிவாயுவை இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சைக்கோ,பீசா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-தமிழ் சினிமாவில் நகைசுவை



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்